www.tamilarangam.net


# சமரன்

மார்க்சிய—லெனினிய
தத்துவ மாத ஏடு

10
செப்டம்பர்—'79
விலை ரூ. 1/-



உள்ளே...

- சுதந்திரமாம் சுதந்திரம்!
- சிறைக் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம்!
- தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சனைகள் —மா. சே. துங்
- முதலாளித்துவ நெருக்கடிகள் —மார்க்சிய பொருளாதாரம்
- பருப்பொருளும் மனமும் (1) —மார்க்சிய தத்துவம்


## பாராளுமன்ற மோசடியை அம்பலப்படுத்துவோம்!

மொரார்ஜி தேசாயின் அரசைக் கவிழ்த்து ஆட்சி பீடத்தில் அமர்ந்த சரண்சிங், தானும் இருபத்து நான்கு நாட்களில் கவிழ்ந்து விட்டார்! ஜனாதிபதி சஞ்சீவரெட்டி பாராளு மன்றத்தைக் கலைத்து, பொதுத் தேர்தலுக்கு உத்தரவு இட்டுள்ளார்! "தேர்தல் அரசியல்" சூடு பிடிக்கத் தொடங்கியுள்ளது! அனைத்து பிற்போக்கு அரசியல் கட்சிகளும் தேர்தல் சூதாட்டக் களத்திலே இறங்க ஆயத்தமாகிக் கொண்டிருக்கின்றன!

தேர்தல் நெருங்கிக் கொண்டிருக்கின்ற இந்நேரத்தில், நாம் "பாராளுமன்ற ஜன நாயகத்தின்" கடந்த 30 ஆண்டுகால ஆட்சிபுரிந்துள்ள "சாதனைகளை" என்ன என் பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டியது அவ சியமானதாகும்.

இந்தியாவில் அந்நியர்களின் சுரண்டல் அகற்றப்பட்டுவிட்டதா? நிலவுடமைச் சுரண் டல் நீங்கிவிட்டதா? "சுதந்திர" இந்தியா சுயதொழில் வளர்ச்சியைப் பெற்றுள்ளதா? வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசி ஏற்றமும் மறைந்து விட்டதா? மக்கள்

சிறப்பாசிரியர் : ஏ. எம். கோதண்டராமன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வறுமை நீங்கி, நல்வாழ்வு பெற்றுள்ளார்களா?

## அந்நியர்களின் சுரண்டல்

இந்தியா "(சு)தந்திர" ஆட்சியை அடைவதற்கு முன்னுல், பெருமளவு பிரிட்டிஷாரின் நேரடிச் சுரண்டலுக்கு மட்டுமே உட்படுத்தப்பட்டிருந்தது. இன்றே அமெரிக்கா, ரஷியா உட்பட 32 கொள்ளைக்கார கூட்டங்களின் கூட்டுச் சுரண்டலுக்கு உட்பட்டுள்ளது.

இந்தியாவில் இன்று அந்நிய மூலதன ஆதிக்கம் பன்மடங்கு பெருகியுள்ளது. உலகிலேயே பெரிய சுரண்டல் நிறுவனங்கள் ஆகிய 50 கம்பெனிகளில் 23 கம்பெனிகள் இந்தியாவில் தனது சுரண்டலை மேற்கொண்டு வருகின்றன. இந்தியாவில் 5 கோடி ரூபாய் மூலதனத்திற்கு மேற்பட்ட கம்பெனிகள் 252 உள்ளன! அவற்றில் 118 கம்பெனிகள் அந்நியக் கம்பெனிகள்! மேற்கண்ட 252 கம்பெனிகளின் மொத்த மூலதனம் 3407 கோடி ரூபாய்! அதில் 2074 கோடி ரூபாய் மேற்கண்ட 118 அந்நியக் கம்பெனிகளின் மூலதனமாகும். அதாவது 60.9 சதவீத மூலதனம் அந்நியக் கம்பெனிகளின் பிடிப்பில் உள்ளது.

1977-ஆம் ஆண்டுக் கணக்குப்படி இந்தியாவின் அந்நியக் கடன்களின் மதிப்பு 11,588. 86 கோடி ரூபாய்! அந்நிய "உதவியின்" ஊடுருவலின் புள்ளி விவரத்தை ஆராய்ந்து பார்த்தால், ஆண்டுதோறும் சராசரி 1000 கோடி ரூபாய் இந்தியாவில் நுழைகிறது.

இந்தியாவின் தொழில் துறைகளில் எங்குமே, எதிலுமே, அந்நிய ஏகாதிபத்தியங்களின் ஆதிக்கந்தான்! தனியார் துறைகளாயிருந்தாலும் சரி அல்லது பொதுத் துறைகளாகயிருந்தாலும்சரி—கனரகயந்திரத் தொழிற்சாலையாக இருந்தாலும்சரி அல்லது மக்கள் அன்றுடம் உபயோகிக்கின்ற பற்பசை, சோப், பவுடர் போன்ற பொருட்களை தயாரிக்கும் ஆலைகளாக இருந்தாலும்சரி— எங்குமே அந்நியர்களின் ஆட்டம்தான்! குளிர்பானத் தொழிற்சாலைகளைக்கூட அவர்கள் விட்டுவைக்கவில்லை!

இந்தியாவின் இன்றையப் பிரதானச் சுரண்டல் கூட்டங்கள் அமெரிக்க ஏகாதிபத்தியமும், சோவியத் சமூக ஏகாதிபத்தியமும் ஆகும்! இரண்டும் இன்று இந்தியாவின் தொழில் துறைகளை தங்களது ஆதிக்கத்தில் கொண்டு வந்துள்ளன! அவை இந்தியாவின் மூலப் பொருள்களையும், குறைந்த கூலிக்குக் கிடைக்கிற உழைப்புச் சக்தியையும் சுரண்டி வருகின்றன! அவர்களின் கொள்ளைக்கு அளவேயில்லை!

அந்நிய ஏகாதிபத்தியங்களின் கொள்ளை வருடத்திற்கு வருடம் அதிகரித்துக்கொண்டே செல்கின்றது! அதேவேளையில் இந்திய மக்களை அவை சுரண்டுவதற்கு வழிவகுத்துக் கொடுக்கின்ற ஏகாதிபத்தியங்களின் தொங்கு சதைகளான இந்தியத் தரகு முதலாளிகளின் சொத்தும் அதிகரித்துள்ளன! 1958-ம் ஆண்டில் 293 கோடி ரூபாயாக இருந்த டாட்டாவின் சொத்து 1966-67.ல் 464 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. 1958.ல் 118 கோடியாக இருந்த பிர்லாவின் சொத்து 1966-67ல் 447 கோடியாக உயர்ந்துள்ளது வருடத்திற்கு வருடம் இந்தத் தரகர்களின் சொத்து அதிகரித்துக்கொண்டே வருகின்றது.

இந்தியாவில் மிகப் பெரிய 20 கம்பெனிகளின் சொத்தின் மதிப்பு 1972-ம் ஆண்டு 3059 கோடி ரூபாயாக இருந்தது! அது 1975-ம் ஆண்டில் 4485 கோடியாக உயர்ந்தது! அதாவது 46 சதவீதம் அதிகரித்துள்ளது.

இந்தியத் தரகு முதலாளிகள் இந்தியாவை அந்நியர்களின் வேட்டைக்காடாக ஆக்கியுள்ளனர். மேலும் மேலும் இந்தியாவை அடிமை நாடாக ஆக்கிக் கொண்டிருக்கின்றனர். தங்களையும் தங்களது அந்நிய எஜமானர்களின் அடிமைகளாக ஆக்கிக்கொண்டுள்ளனர்.

## நிலவுடமைச் சுரண்டல்

கடந்த 30 ஆண்டுகால "பாராளுமன்ற ஜனநாயக" ஆட்சியிலே நிலவுடமைச் சுரண்டல் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகிறது. கிராமப்புற ஏழை, நிலமற்ற விவசாயிகளின் வறுமை பன்மடங்கு அதிகரித்துள்ளது.

நிலப்பிரபுக்களின் கைகளிலே குவிந்துள்ள நிலங்களின் அளவு மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டுதான் செல்கிறது. கிராமப் புறங்களில் உள்ள மொத்த நிலப்பரப்பில் 80 சதவீதம், கிராமப்புற மக்கள் தொகையில் 20 சதவீதமான நிலப்பிரபுக்கள், பணக்கார விவசாயிகளின் கைகளில்தான் உள்ளன.

1970-ஆம் ஆண்டு புள்ளி விவரப்படி, கிராமப்புற மக்கள் தொகை 43.4 கோடி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதில் 10 கோடி மக்களுக்கு ஒருஅங்குல நிலம் கூட கிடையாது! 18.5 கோடி மக்களுக்கு 5 ஏக்கருக்கும் குறைவாகவே நிலங்கள் உள்ளன! கிராமப்புற மக்கள் தொகையில் 78 சதவீதம் நில மற்ற, ஏழை விவசாயிகள் தான்!

மேலும் விவசாயிகள் மீதான குத்தகை, வாரம், வட்டி போன்ற கொடுமைகளுக்கு அளவே கிடையாது. கிராமப்புற மக்கள் மேலும் மேலும் தொடர்ந்து வறுமையில் தள்ளப் பட்டுவருகின்றனர்.

நிலப்பிரபுக்களின் அரசியல், பண்பாட்டு ஆதிக்கங்களும் தொடர்ந்து அரசால் பாது காக்கப்பட்டு வருகின்றன! ஏழை, நிலமற்ற விவசாயிகளின் மீது குறிப்பாக அரிசன மக்களின் மீது நிலப்பிரபுக்கள் தொடுக்கின்ற தாக்குதல்களின் கொடுமைகளுக்கு அளவே கிடையாது! தமிழகத்திலே 42 விவசாயிகள் நிலப்பிரபுக்களால் உயிரோடு கொளுத்தப் பட்டனர்!

இவ்வாறு 30 ஆண்டுகால "பாராளு மன்ற ஆட்சி" நிலவுடமையின் கொடுமை களைத் தொடர்ந்து ஆதரித்து, வருகிறது; நிலவுடமை அமைப்பைப் பாதுகாத்து வரு கிறது!

## மக்களின் அவலநிலை

உலகிலேயே மிக வறுமையான நாடு "சுதந்திர" இந்திய நாடுதான்! வறுமை இங்கு தாண்டவமாடுவதற்கு முழுச்சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது!

வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசி ஏற்றமும் மக்களை வாட்டி வதைக்கின்றன. கோடிக்கணக்கில் வேலையில்லாதவர்கள் இருந்து வருகின்றனர். வேலையில் உள்ளவர் களிலும் லட்சக்கணக்கானவர்கள், தங்க ளுடையத் திறமைக்குக் குறைவான வேலை களில் உள்ளனர்.

விலைவாசியோ பன்மடங்கு வேகமாக ஏறி வருகிறது. மக்கள் தங்கள் அடிப்படைத் தேவைகளில் அரைமடங்குகூட பூர்த்திசெய்ய முடியாத அவலநிலை நீடிக்கிறது! அரை வயிற்றுக் கஞ்சியுடனும் அரைகுறை ஆடை யுடனும்தான் அவர்கள் "ஆனந்த சுதந் திரத்தை" அனுபவித்து வருகின்றனர்.

மக்கள் மீதான வரிக்கொடுமையும் பன் மடங்கு வளர்ந்துள்ளது! சொத்துள்ளவர் களின் மீது அரசாங்கம் விதிக்கின்ற நேரடி வரியை விட, பொது மக்கள் மீது விதிக்கப் படுகின்ற மறைமுகவரி தான் மிக மிக அதிகம்! 30 ஆண்டுகால ஆட்சியில் நேரடியான வரியின் விகிதம் குறைந்துள்ளது! மறைமுக வரியின் விகிதம் அதிகரித்துள்ளது.

—1

நாட்டின் பல பகுதிகளில் விவசாயிகளின் சராசரி வருமானம் நாளொன்றுக்கு 63 பைசாக்களுக்கும் குறைவே! கிராமப்புறத்து மக்களில் 79 சதவீதம், வறுமையின் கீழ் நிலை யில் (belowthe poverty level) வாழ்ந்து வரு கின்றனர்.

இதுதான் 30 ஆண்டுகால "பாராளு மன்ற ஆட்சி" மக்களுக்கு அளித்த பரிசு!

## மக்களின் மீதான அடக்கு முறை

கடந்த 30 ஆண்டுகால "பாராளு மன்ற ஜனநாயகம்" மக்கள் மீது தொடுத்த அடக்கு முறைகளுக்கு அளவே கிடையாது! "சோச லிசச் சிற்பி" நேருவின் ஆட்சியாக இருந் தாலும் அல்லதுசாஸ்திரி, இந்திரா, மொரார்ஜி ஆட்சியாக இருந்தாலும் சரி, எந்த ஆட்சியும் மக்கள் மீது அடக்கு முறைகளை தொடுப்பதில் தயங்கியதேயில்லை!

சுரண்டும் வர்க்கத்தின் அரசியல், பொரு ளாதார, பண்பாட்டு ஆதிக்கங்களுக்கு எதிராக தொழிலாளிகள். விவசாயிகள், மாணவர்கள் மற்றும் பிறமக்கள் கிளர்ந்தெழும்போதெல் லாம், அவர்கள் சந்திப்பது தடியடிகளும், துப்பாக்கிச் சூடுகளும், சிறைத் தண்டனை களும்தான்! மக்கள் மீது தடியடி, துப்பாக்கிச் சூடு நடக்காத நாட்களே இல்லையென்று ஆகிவிட்டது!

நக்ஸல்பாரி, ஸ்ரீகாகுளம் போன்ற இடங் களில் விவசாயிகள் நிலப்பிரபுக்களுக்கு எதி ராக கிளர்ந்தெழுந்த போது, இந்தப் "பாராளு மன்ற" பாதகர்கள் ஆட்சிதான் அவர்கள் மீது வரலாறு கண்டறியாத அடக்கு முறை களை ஏவியது! நாடெங்கும் ஆயிரக்கணக்கில் புரட்சியாளர்கள் கொல்லப்பட்டனர்! லட் சக் கணக்கில் சிறைகளில் தள்ளப்பட்டனர். "ஜனநாயகத் தலைவியான" இந்திராவின் ஆட்சியில்தான் கிஸ்டா கவுடா, பூமையா என்ற மலைவாழ் விவசாய மக்கள் தலைவர்கள் "சட்ட பூர்வமாக" தூக்கில் தொங்கவிடப் பட்டனர்.

கடந்த 30 ஆண்டு காலங்களில் தொடர்ந்து உள்நாட்டு பாதுகாப்பு சட்டம் (MISA), இந்தியப் பாதுகாப்பு சட்டம் (DIR) தடுப்புக்காவல் சட்டம் (PDAct) போன்ற அடக்கு முறைச் சட்டங்கள் மக்கள் மீது ஏவப்பட்டு வருகின்றன!

இவ்வாறு 30 ஆண்டுகால "பாராளுமன்ற ஜனநாயகம்" இந்திய மக்களுக்கு அளித்த பரிசு "தடியடி, துப்பாக்கிச் சூடு, தூக்குத் தண்டனை, ஜெயில் தண்டனை, மிசா, டி. ஐ. ஆர், P.D ஆக்ட், அவசர நிலை ஆகியவை தான்!"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மேற்கண்ட "சாதனைகளைப்" புரிந்தவர்கள் யார்?

இதுவரை நாம் கண்ட "சாதனைகளைப்" "பாராளுமன்ற ஜனநாயக ஆட்சியின்" மூலம் புரிந்தவர்கள் யார்? இன்று நம்மிடையே ஓட்டு கேட்டு வந்து நிற்கின்ற அரசியல் கட்சிகள் தானே! "ஜனநாயகத்தலைவி" இந்திராவின் கட்சி பல ஆண்டுகள் மத்தியிலும், மாநிலங்களிலும் இதுவரை ஆட்சிபுரிந்தது இல்லையா? "முழுப்புரட்(டு)சி" வீரர்கள் மொரார்ஜியும், சரண்சிங்கும் நேருவின் ஆட்சியிலும் கடந்த சில ஆண்டுகளாக ஜனதாவின் ஆட்சியிலும் அமர்ந்திருக்கவில்லையா? சுவரண்சிங்குகளும், சுப்பிரமணியங்களும் அன்று மத்திய அரசில் நேருவின் கீழும், இந்திராவின் கீழும் ஆட்சியில் நீடிக்கவில்லையா? இவர்கள்தானே இன்று பல்வேறு கட்சிகளாகப் பிரிந்து, ஓட்டுக் கேட்க வந்துகொண்டு இருக்கிறார்கள்?

மேற்கண்ட "அரசியல் வாதிகளும்", அவர்கள் சார்ந்து இருக்கிற அரசியல் கட்சிகளும், இன்று "புத்தம் புதிய இந்தியாவை" உருவாக்கப் போவதாக வாக்குறுதிகளை அள்ளி வீசிக்கொண்டு வருகிறார்களே! கடந்த 30 ஆண்டுகால ஆட்சியில் அந்தப் "புத்துலக இந்தியாவை" ஏன் உருவாக்கவில்லை! அவர்களை அவ்வாறு செய்ய வேண்டாம் என்று மக்கள் தடுத்தார்களா?

கடந்த கால தங்கள் ஆட்சியில், இந்தியாவை அந்நிய ஏகாதிபத்தியங்களின் வேட்டைக் காடாக ஆக்கியுள்ள இவர்கள்தான், இன்று "சுதேசிய இந்தியாவைப்" படைக்க ஆட்சி உரிமை கேட்கிறார்கள்! கொடும் நிலவுடமைச் சுரண்டலுக்கு குடை பிடித்து வந்த இவர்கள்தான், இன்று விவசாய மக்களின் "கண்ணீர் துடைக்க" ஆட்சி உரிமை கேட்கிறார்கள்! அடுப்பெரிக்கும் மண்ணெண்ணெய் வரை அனைத்துப் பொருளுக்கும் தட்டுப்பாட்டையும், கட்டுப்பாட்டையும் ஏற்படுத்தியுள்ள இவர்கள்தான், இன்று விலைவாசியின் உயர்வை வீழ்த்தி, மக்கள் "நலம் காக்க" ஆட்சி உரிமை கேட்கிறார்கள்! மிசா, டி ஐ ஆர், P.D ஆக்ட், அவசரநிலை போன்ற அடக்கு முறைச் சட்டங்களை ஆபரணமாகக் கொண்ட இவர்கள்தான், மக்களுக்கு "ஜனநாயக உரிமை காக்க" ஆட்சி உரிமை கேட்கிறார்கள்!

இவர்கள் அனைவரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள்தான்! ஜனதா, ஜனதா(S) போன்ற புதிய புதிய கட்சிகள் எல்லாம் "புதிய மொந்தையில் பழைய கள்தான்!"

## பாராளுமன்ற ஜனநாயகத்தின் உண்மைச் சொரூபம்

கடந்த 30 ஆண்டுகாலமாக இந்தியா எந்த "ஜனநாயகத்தின்" கீழ் ஆட்சி செய்யப்பட்டு வருகிறது? 'பாராளுமன்ற ஜனநாயகம்' தானே! பாராளுமன்ற ஆட்சிமுறை உண்மையிலேயே மக்களின் நலன்காக்கும் ஆட்சிமுறை என்றால், ஏன் நம் மக்களின் நலன் அதன் கீழ் பாதுகாக்கப்படவில்லை?

பாராளுமன்ற ஆட்சி முறையைவரலாற்று அடிப்படையில் ஆராய்ந்து பார்த்தால், அதன் உண்மைச் சொரூபம் வெளிப்படும்.

18, 19ஆம் நூற்றாண்டுகளில் மேலை நாடுகளில் நிலவுடமைச் சமுதாயம் தனது அழிவை நோக்கிப் போய்க் கொண்டிருந்தது. நிலவுடமையின் கொடுமைகளுக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்தனர். நிலவுடமைக்கு எதிரான இந்த ஜனநாயகப் புரட்சியில் அப்போது தோன்றி வளர்ந்து கொண்டிருந்த முதலாளித்துவ வர்க்கம் தலைமைப் பாத்திரம் வகித்தது. நிலவுடமை அமைப்புத் தகர்க்கப் படாமல், முதலாளித்துவம் வளர முடியாது. எனவே நிலவுடமையின் சாம்பல் மீது தான் முதலாளித்துவம் வளரமுடியும் என்று மார்க்ஸ் குறிப்பிட்டார்.

நிலவுடமை வர்க்கத்தின் ஆட்சிக் கெதிரான புரட்சியில் முதலாளித்துவ வர்க்கம் தனது ஆதிக்கத்தை நிறுவ முயன்றது. நிலவுடமை வர்க்கத்தின் ஆட்சி வடிவமாக முடியரசுகள் அப்போது நிலவின. எனவே முதலாளித்துவ வர்க்கம் முடியரசுகளுக்கு எதிராகக் குரல் எழுப்பியது. முடியரசுகளின் அதிகாரத்தை வீழ்த்த—அல்லது குறைக்க அது போராடியது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிறுவனமே ஆட்சி செய்ய வேண்டும் என்று சில ஜனநாயகக் கோஷங்களை அது முன் வைத்தது.

நிலவுடமைக்கு எதிரான புரட்சியின் இறுதியில் முதலாளித்துவ வர்க்கம் அரசியல் அதிகாரத்தைக் கைப் பற்றியது. தனது நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு பாராளுமன்ற நிறுவனங்களை ஏற்படுத்திப் பயன் படுத்தத் தொடங்கியது.

அந்தக் காலகட்டத்தில் முதலாளித்துவ வர்க்கத்தால் ஏற்படுத்தப்பட்ட அந்த முதலாளித்துவப் பாராளுமன்றங்கள் ஒரு முற்போக்கான பங்கு வகித்தது உண்மையே. முடியரசுகளை அகற்றிய அதன் சாதனை சமுதாய வளர்ச்சியில் முற்போக்கான சாதனையே யாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதிகாரத்தைக் கைப்பற்றிய பின் முதலாளித்துவ வர்க்கம் தனது பொருளாதார, அரசியல், பண்பாட்டு நிலையைப் பாதுகாத்துக் கொண்டது;முதலாளித்துவம் வளர்ச்சியடைந்தது. ஆனால் முதலாளித்துவத்தின் வளர்ச்சியை ஒட்டி, பாராளுமன்றம் முடியரசுக்கு எதிராக தான் வகித்த முற்போக்குப் பாத்திரத்தை இழக்கத் தொடங்கியது. முதலாளித்துவம் மேலும் வளர வளர, ஆட்சி பாராளுமன்றத்தின் மூலம் நடைபெறுவது மாறி, திரை மறைவில் ஆளும் வர்க்கத்தின் பிற பலாத்கார உறுப்புகள் மூலம் நடைபெற ஆரம்பித்தது. பாராளுமன்றம் என்பது மக்களை ஏமாற்றும் ஒரு கருவியாகப் பயன்படத் தொடங்கியது. 3 அல்லது 5 வருடங்களுக்கு ஒருமுறை ஆளும் வர்க்கத்தில் எந்தப் பிரிவு மக்களை அடக்கியாளும் அதிகாரத்தை நிர்வகிப்பது என்பதை தீர்மானிப்பதாகவே பாராளுமன்றத் தேர்தல்கள் அமைந்தன. இவ்வாறு வரலாற்று ரீதியாக பாராளுமன்றம் இன்றைய நிலையில் முதலாளித்துவ நாடுகளில் ஒவ்வாத ஒரு நிறுவனமாக மாறிவிட்டது.

## பாட்டாளி வர்க்கச் சர்வாதிகாரமும் பாராளுமன்றமும்

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்த—ஏகாதிபத்தியமாக வளர்ச்சியடைந்த— நாடுகளில் உள்ள பாட்டாளிவர்க்கம் தனது லட்சியத்தை எவ்வாறு அடைவது? தனது சர்வாதிகாரத்தை அது எவ்வாறு சுரண்டும் வர்க்கத்தின்மீது நிறுவுவது? முதலாளித்துவப் பாராளுமன்றம் மூலம் அது இயலுமா? இக் கேள்விகளை இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே பாட்டாளி வர்க்கமும் அதனுடைய கட்சியாகிய கம்யூனிஸ்ட் கட்சியும் எதிர்நோக்கின.

முதலாளித்துவப் பாராளுமன்றத்தைக் கைப்பற்றுவதன் மூலம் பாட்டாளி வர்க்கம் தனது வர்க்க சர்வாதிகாரத்தை நிறுவ முடியுமா? அதாவது அமைதிவழி சமுதாய மாற்றம் — ஓட்டுச் சீட்டு மூலம் மாற்றம்—சாத்தியமா? இக் கேள்விக்கு விடை அளிப்பதில் காட்ஸ்கி போன்ற திருத்தல்வாதிகள் ஒரு புறமும், லெனின் தலைமையின் கீழ் செயல்பட்ட போல்ஷ்விக் கட்சி மறுபுறமும் பிரிந்து நின்றன.

திருத்தல் வாதிகள் கூறியது என்ன? அமைதிவழி சோசலிச மாற்றம் சாத்தியமே; பாராளுமன்றத்தின் மூலமாகவே பாட்டாளி வர்க்கம் தனது அதிகாரத்தை நிறுவமுடியும் என்றனர்.

லெனின் கூறியது என்ன? அமைதிவழி சோசலிச மாற்றம் என்பது சாத்தியமே அல்ல; ஆளும் வர்க்கம் தானாகவே ஒரு போதும் ஆட்சியை விட்டுக் கொடுக்காது; பலாத்கார புரட்சியின் மூலமாகத்தான் பாட்டாளிவர்க்கம் தனது அதிகாரத்தை நிறுவமுடியும் என்று லெனின் கூறினார்! பாராளுமன்றத் தேர்தல் என்பது மூன்று அல்லது ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆளும் வர்க்கத்தின் எந்தப் பிரிவு மக்களை அடக்கி ஆள்வது என்பதைத் தீர்மானிப்பதே யாகும் என்றார். பாராளுமன்றம் மூலம் அதிகார மாற்றம் என்பது சாத்தியமே யல்ல என்று உறுதியாகக் கூறினார்.

உலக வரலாறு லெனின் காட்டிய வழி தான் சரி என்பதை நிரூபித்துள்ளது. லெனின் காட்டிய வழியில் சென்றதால் தான் ரஷியாவில் பாட்டாளிவர்க்கம் வெற்றி பெற முடிந்தது. மேலும் பலநாடுகளிலும் அவ்வாறே பாட்டாளி வர்க்கம் வெற்றி பெற்றுள்ளது.

## கம்யூனிஸ்ட் கட்சி பிற்போக்குப் பாராளுமன்றங்களில் கலந்து கொள்ளலாமா?

முதலாளித்துவப் பாராளுமன்றங்கள் வரலாற்று ரீதியாக காலாவதியாகி விட்டது என்றால், அவற்றில் கம்யூனிஸ்டு கட்சி கலந்து கொள்ளலாமா?

இக் கேள்விக்கு லெனின் கூறிய பதில் என்ன? முதலாளித்துவப் பாராளுமன்றம் வரலாற்று ரீதியாக காலாவதியாகிவிட்டது என்பது நூற்றுக்கு நூறு உண்மைதான். ஆனால் இன்னும் அது அரசியல் ரீதியாக காலாவதியாகிவிடவில்லை. இன்னும் பாராளுமன்ற நிறுவனத்தை முதலாளித்துவ வர்க்கம் தூக்கிப் பிடித்து கொண்டிருக்கிறது. இதனை மனத்தில் கொண்டுதான், மேற்கண்ட வினாவிற்கு பதில் அளிக்க வேண்டும் என்று அவர் கூறினார்.

பாட்டாளிவர்க்கம் யுத்ததந்திர (Strategy) அடிப்படையில் முதலாளித்துவப் பாராளுமன்றத்தை முற்றிலும் நிராகரிக்கிறது. அதாவது பாட்டாளிவர்க்கம் பாராளுமன்ற மாற்றம் மூலம் தனது சர்வாதிகாரத்தை நிச்சயமாக நிறுவமுடியாது. பலாத்காரப் புரட்சி மூலம் தான் அது தனது சர்வாதிகாரத்தை நிறுவ முடியும்.

பாட்டாளிவர்க்கம் போர்த்தந்திர (tactics) அடிப்படையில் முதலாளித்துவப் பாராளுமன்றத்தில் சில காலகட்டங்களில் பங்கு கொள்ளலாம். அது எந்த காலகட்டம்? புரட்சிகரச் சூழ்நிலை நிலவாத—அல்லது பின் நோக்கிப் போய் கொண்டிருக்கிற—ஒரு கால கட்டத்தில் மக்களுக்கு பாராளுமன்றத்தின் போலித்தனத்தைத் தோலுரித்துக் காட்டுவதற்காக அதில் கலந்து கொள்ளலாம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மேற்கண்டவைதான்லெனினின் கருத்துக்கள்! பாராளுமன்றமூலம் அதிகாரம் கைப்பற்றுதல் என்று கூறி, பாராளுமன்றத்தில் பங்கு கொள்வதை யுத்த தந்திர அடிப்படையில் ஏற்றுக்கொண்டவர்கள் திருத்தல் வாதிகளே —கம்யூனிச விரோதிகளே— முதலாளித்துவ வர்க்கத்தின் கைக்கூலிகளே என்று லெனின் தெளிவாக எடுத்துக்காட்டினார். மேலும் அதனை யுத்ததந்திரமாக ஏற்றுக்கொள்ள வில்லை என்று கூறிக்கொண்டு அதே சமயத்தில் குறிப்பிட்ட பௌதிகச் சூழ்நிலைகளைக் கணக்கில் எடுக்காமல் போர்த் தந்திர ரீதியில் தொடர்ந்து பாராளுமன்றத்தில் கலந்து கொள்பவர்களும் வலது திரிபுவாதிகளே என்று அவர் மிக உறுதியாகக் கூறினார்.

அதே சமயத்தில் போர்த்தந்திர ரீதியில் பாராளுமன்றத்தில் பங்கெடுக்க வேண்டிய சூழ்நிலையில் பங்கெடுக்காமல் இருப்பது இடது சந்தர்ப்பவாதம் என்று அவர் கூறினார். பாராளுமன்றம் வரலாற்று ரீதியாக காலாவதியாகி விட்டாலும் கூட, அது இன்னும் அரசியல் ரீதியாக காலாவதியாகி விடவில்லை என்று அவர் கூறினார்.

எனவே பாராளுமன்றப் போராட்ட முறையை பாட்டாளிவர்க்கக் கட்சி யுத்த தந்திர ரீதியில் முற்றிலும் நிராகரிக்கிறது. போர்த்தந்திர ரீதியில் சில குறிப்பிட்ட கட்டங்களில் அது பாராளுமன்ற போராட்ட முறையை ஏற்றுக்கொள்கிறது.

மேற்கண்ட அடிப்படையில்தான் சில கட்டங்களில்டுமாவில்லெனினின் ப்பால்ஷிவிக் கட்சி பங்கெடுத்தது; சில கட்டங்களில் புறக்கணித்தது.

ஆனால் இறுதியில் ஆயுதந் தாங்கிய புரட்சியின் மூலமே பாட்டாளிவர்க்கம் அங்கு தனது சர்வாதிகாரத்தை நிறுவியது.

## இந்தியாவில் நிலை என்ன?

இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சி போர்த் தந்திர ரீதியில் பாராளுமன்றத்தில் கலந்து கொள்ளலாமா? இக்கேள்விக்கு விடையளிக்க, இந்தியச் சமூக நிலையைக் கணக்கில் கொள்ளவேண்டும்.

இந்தியா ஒரு முதலாளித்துவ நாடா! இல்லை. அது ஒரு அரைக்காலனித்துவ, அரை நிலவுடமை நாடு! இங்கு முதலாளித்துவ ஜனநாயக உரிமைகள் கூட கிடையாது. முதலாளித்துவ நாடுகளில் பாட்டாளிவர்க்கத்தின் வளர்ச்சி காரணமாகவும், தன்னுடைய சில சொந்த நலன்களுக்காகவும் முதலாளித்துவ வர்க்கம் தவிர்க்க இயலாதவாறு சில ஜனநாயக உரிமைகளை மக்களுக்கு அளிக்கிறது. ஆனால் ஒரு அரைக் காலனி, அரைநிலவுடமை நாட்டில் எவ்வித முதலாளித்துவ ஜனநாயக உரிமையும் உண்மையில் கிடையாது. ஆளும்வர்க்கத்திற்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டக்கூட உரிமை கிடையாது. அங்கு எப்போதும் "நெருக்கடி நிலைதான்" பிரகடனப் படுத்தப்படுகிறது.

அரைக்காலனித்துவ, அரைநிலவுடமைச் சமுதாயமான இந்தியாவில் நிலவுகிற பாராளுமன்றம் ஒரு முதலாளித்துவ பாராளுமன்றமே அல்ல. முதலாளித்துவ பாராளுமன்ற வடிவம்தான் இருக்கிறதே ஒழிய, அதன் உள்ளடக்கம் இங்கு இல்லை. இந்தியப் பாராளுமன்றம் இந்திய முதலாளிகள் நிலவுடமையை எதிர்த்துப் போராடி தாங்கள் நிறுவிய பாராளுமன்றம் அல்ல; மாறாக ஒரு அரைக்காலனித்துவ, அரை நிலவுடமை நாட்டில் ஏகாதிபத்தியங்களால்— குறிப்பாக பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தால் மேலிருந்து திணிக்கப்பட்டதாகும்.

அடுத்துஇந்தியா இன்றுஒருபுரட்சிகர சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. ஆளும் வர்க்கங்களுக்கு இடையே உள்ள முரண்பாடுகள் கூர்மை யடைந்து, அவற்றால் பழைய முறையில் ஆள முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆளும் வர்க்கத் தரகு முதலாளிகளும், நிலப்பிரபுக்களும் தங்களுடைய "பாராளுமன்றத்தை" தாங்களே கலைத்துக் கொண்டு இருக்கிறார்கள். மேலும் நாடெங்கும் மக்களின் தீவிரமான அரசியல், பொருளாதாரப் போராட்டங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆளும் வர்க்க அரசின் பலாத்கார உறுப்பாகிய போலீஸ் கூட இன்று போராட்டத்தில் குதித்துள்ளது. அதாவது புரட்சிகரச் சூழ்நிலை மிகச் சாதகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது. எனவே இச்சூழ்நிலையில் பாராளுமன்றத்தில் பங்கெடுப்பதைப் போர்த் தந்திர ரீதியில் கூட இந்தியாவில் ஏற்றுக்கொள்ளப்பட முடியாது.

எனவே இன்றைய இந்தியச் சமூக நிலையில், பாராளுமன்றத்தில் பங்கு கொள்வது என்பது முற்றிலும் நிராகரிக்கப் படவேண்டும்.

## ஆளும் வர்க்கங்கள்

## கூறுவது என்ன?

பாராளுமன்றப் பாதை மூலம் இந்திய மக்களின் நலன்களைப் பாதுகாப்போம் என்று இந்திய ஆளும்வர்க்கக் கட்சிகள் கூறுகின்றன இது வரை 30 ஆண்டு காலம் பாராளுமன்றப் பாதையில்தான் இவர்கள் நடந்துவந்தார்கள். ஏன் மக்களுடைய பிரச்சினைகளைத் தீர்க்க முடியவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவே ஆளும் வர்க்கக் கட்சிகள் மக்களை ஏமாற்றவே பாராளுமன்றப் பாதையை முன் வைக்கின்றன.

## திருத்தல்வாதிகள்

## கூறுவது என்ன?

திருத்தல்வாதிகளான "வலது கம்யூனிஸ்ட்களும்" நவீன திருத்தல்வாதிகளான "இடதுகம்யூனிஸ்ட்களும்" தங்களைப் பாராளுமன்றக் கட்சிகளாகவே ஆக்கிக் கொண்டனர். திருத்தல்வாதிகள் அமைதி வழி மாற்றத்தை திருத்தல்வாதத் தலைவன் குருஷேவின் கொள்கைப்படி யுத்த தந்திர ரீதியிலேயே ஏற்றுக் கொண்டார்கள். நவீன திருத்தல் வாதிகள் இந்தியாவில் அமைதிவழி மாற்றத்திற்கு சாத்தியப்பாடுகள் இருப்பதாகவும், இருப்பினும் "எதற்கும்" (?) தயாராக இருக்கவேண்டும் என்று கூறிக்கொள்கிறார்கள். தற்போதைக்குப் பாராளுமன்றத்தை மக்கள் மத்தியில் "அம்பலப்படுத்துவதற்காக" பங்கு கொள்கிறார்களாம். அதாவது போர்த் தந்திர ரீதியில் ஏற்றுக் கொள்கிறார்களாம்.

இரண்டு திருத்தல்வாதிகளும் நடைமுறையில் ஒரே கொள்கையைத்தான் பின்பற்றுகிறார்கள். இரண்டு கட்சிகளுமே இன்றைய ஆளும் வர்க்கத்தினுடன் சேர்ந்து அரசியல் அதிகாரத்தைப் பங்கு போடவே முயலுகின்றன. பாட்டாளிவர்க்கச் சர்வாதிகாரத்தை நிறுவ வேண்டுமென்ற சிந்தனை துளிகூட கிடையாது என்பது மட்டுமல்ல; அதற்கு எதிராகவேச் செயல்படுகிறார்கள்.

பாராளுமன்ற மாயையைப் "போக்குவதற்காகத்" தேர்தலில் கலந்து கொள்வதாகக் கூறுகின்ற இந்த "புரட்சிவாதிகள்" தான் "வங்கத்தைப் பார்! திரிபுராவைப்பார்! கேரளாவைப்பார்" என்று "வீர முழக்கம்" இடுகின்றனர்! அங்கு என்ன மக்கள் அரசு நிறுவப்பட்டு விட்டதா? அந்நியச்சுரண்டலும், நிலவுடமைக் கொடுமையும் நீங்கிவிட்டதா? வேலையில்லாத் திண்டாட்டமும் விலைவாசி ஏற்றமும் மறைந்து விட்டதா? அல்லது அங்கே ஆளும் வர்க்கத்தின் போலீஸ், ராணுவம் மக்களுக்குச் சாதகமாக மாறிவிட்டதா? எதற்கு இந்த "ஆர்ப்பாட்டங்கள்"? இதுதான் பாராளுமன்ற மாயையை மக்களிடம் நீக்குவதற்கான வழியா? திருத்தல்வாதிகளும், நவீன திருத்தல் வாதிகளும் தான் இன்று புரட்சிகர மக்களிடையே பாராளுமன்ற மாயையை வலுப்படுத்த முயலுகிறார்கள்.

## மாநிலக்கட்சிகள்

## கூறுவது என்ன?

தி.மு.க., அ.தி.மு.க. போன்ற மாநிலக் கட்சிகள் இனவிடுதலை, மொழி விடுதலை என்ற கோஷங்களை முன்வைத்துக்கொண்டு, தேர்தலில் போட்டியிடுகிறார்கள்!

இந்தியாவில் இன்று பல இனங்களும், மொழிகளும் ஒடுக்கப்பட்டு வருவதற்கு என்ன அடிப்படை? அந்நிய ஏகாதிபத்தியங்களின் நலன்களும், அவர்களுடைய ஏஜெண்டுகளான இந்தியத்தரகு முதலாளிகள், நிலப்பிரபுக்களின் நலன்களும்தான் காரணம். இவர்களை ஒழித்துக்கட்டாமல் எந்த இனத்திற்கும், மொழிக்கும் விடுதலை கிடைக்க முடியாது! பாட்டாளிவர்க்கத்தின் தலைமையில் அமைந்த மக்கள் அரசின் கீழ்தான் எல்லா இனங்களும், நாடுகளும் சுயநிர்ணய உரிமையை அடைய முடியும்.

எனவே உண்மையிலேயே இனவிடுதலை, மொழி விடுதலைக்காகப் பாடுபடுகின்ற கட்சியாக ஒரு கட்சி இருந்தால், அது தன்னை இன்றைய புதிய ஜனநாயகப் புரட்சியில்—ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலவுடமை எதிர்ப்புப் புரட்சியில் தீவிரமாக ஈடுபடுத்தும்.

ஆனால் தி.மு.க., அ.தி.மு.க.போன்றவை செய்வது என்ன? அவர்களுக்கு நாகர்கள், மிஜோக்களின் வழிமுறை கண்ணில் படவில்லை! மத்திய காபினட் மந்திரி பதவியும், மாநில மந்திரி பதவிகளும்தான் கண்ணில் தென்படுகின்றன. "திராவிட நாடு இல்லையேல் சுடுகாடு" என்று ஒரு காலத்தில் "முழங்கியவர்கள்" இன்று அந்தக் கொள்கையை அப்படியே "முழுங்கி" விட்டார்கள். நேற்று ஒரு கூட்டு, இன்றொரு கூட்டு என்ற அடிப்படையில் தேர்தல் கூட்டிற்கு இந்திராவுக்கு மனுப்போடவா அல்லது சரண்சிங்கிற்கு மனுப்போடவா என்று இரவும் பகலுமாக அலைந்து கொண்டிருக்கின்றனர்.

இன விடுதலைக்கும் பாராளுமன்றத்திற்கும் சம்பந்தமே இல்லை; மாறாக இன்றையப் "பாராளுமன்ற ஜனநாயகம்" இன, மொழி விடுதலைகளுக்கு எதிரானதாகும்.

எனவே இன்றைய தினம் பாராளுமன்றத் தேர்தலில் கலந்து கொள்கின்ற எந்தக் கட்சியும் உண்மையான இன விடுதலைக்குப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடுபடும் கட்சி இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

## நமது இன்றையக் கடமை என்ன?

கடந்த 30 ஆண்டு கால "பாராளுமன்ற ஜனநாயகம்" இந்தியாவை மேன் மேலும் அந்நிய ஏகாதிபத்தியங்களைச் சார்ந்து நிற்கும் அடிமை நாடாகத்தான் மாற்றியுள்ளது; உள் நாட்டு நிலவுடமைச் சுரண்டலைத் தொடர்ந்து பாதுகாத்து வருகிறது.

எனவே இந்தியா ஒரு அரைக்காலனி அரை நிலவுடமை நாடாக இருப்பதாலும், இன்று இந்தியாவில் புரட்சிகரச் சூழ்நிலை நன்கு முன்நோக்கி வளர்ச்சியடைந்து கொண்டு செல்வதாலும் இந்திய மக்கள் அந்நியர்களால் திணிக்கப்பட்ட "பாராளுமன்ற ஜனநாயகத்தைப்" புறக்கணிக்க வேண்டும்; புதிய ஜனநாயகப் புரட்சியில் முன் நின்று வெற்றிகரமாக அதனை நிறை வேற்றவேண்டும்; பாட்டாளிவர்க்கத்தின் தலைமையின் கீழ் மக்கள் சர்வாதிகாரத்தை நிறுவ வேண்டும். அதன் மூலமே நமது பிரச்சனைகள் தீர்க்கப் பட முடியும்!

பாராளுமன்ற மோசடியை அம்பலப் படுத்துவோம்!

ஏகாதிபத்திய—நிலவுடமைச் சுரண்டலைத் தகர்ப்போம்!

புதிய ஜனநாயகப்புரட்சியை முன்னெடுத்துச் செல்வோம்!

மக்கள் சர்வாதிகார அரசை நிறுவுவோம்.

★

---

# நக்சல்பாரி புரட்சியாளரை நிபந்தனையின்றி விடுதலைசெய்!

## சிறைச்சாலைகளை சித்திரவதைக் கூடமாக்காதே!

### அரசியல் கைதிகள் விடுதலை இயக்க சார்பில் பெண்ணாடத்தில் சேலத்தில் தர்மபுரியில் இடிமுழக்கம் !

நக்சல்பாரி புரட்சியாளர்களின் விடுதலையைக் கோரி தமிழகமெங்கும் போர்க்குரல் வெடித்தெழத் தொடங்கியுள்ளது. "சிறைச் சாலையை சித்திரவதைக்கூடமாக்காதே" "போலீசாரின் ஒடுக்குமுறை ஒழிக" போன்ற கோஷங்கள் விண்ணதிர மண்ணதிர ஆளும் வர்க்கத்தார் மனமதிர தமிழகமெங்கும் சீறிப் பாய்ந்து எழத் தொடங்கிவிட்டது. இக்கூட்டங்களில் ஆயிரம் ஆயிரம் மக்கள் அலைபோல அணி திரண்டு படைபோல நடை பயிலத் தொடங்கியுள்ளனர்.

### பெண்ணாடத்தில் கண்டன முழக்கம்

பெண்ணாடம் — புரட்சித் தோழர் கலியபெருமாளை பெற்றுத் தந்த புரட்சிப் பூமி இது. இங்கேதான் தமிழகப் புரட்சி இயக்கத்தின் ரத்த சாட்சிகளான கணேசனும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காணியப்பனும் சர்ச்சிலும் தங்களின் சரீரத்தைச் சாய்த்து, எழத் தொடங்கிய புரட்சிக்கு கால்கோல் விழா நடத்தினர். இங்கே நக்சல்பாரி புரட்சியாளரின் விடுதலையைக் கோரி அரசியல் கைதிகள் விடுதலை இயக்கத்தின் சார்பில் 19-8-79 அன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. முதல் நிகழ்ச்சியாக வீரத் தியாகிகள் நினைவாக சௌந்தர சோழபுரத்தில் தியாக செம்மல்களின் ரத்தத்தால் சிகப்பேறி செவ்வொளி பரப்பும் செங்கொடியை தோழர் ஈஸ்வரன் ஏற்றிவைத்தார். தெருவெல்லாம் மைக் பொருத்தப்பட்ட ஊர்தியில் புரட்சி கீதங்கள் ஒலிபரப்பப்பட்டது. ஐநூறுக்கும் மேற்பட்ட மக்கள் ஊர்வலமாகப் புறப்பட்டு ஊர் முழுவதும் சுற்றிவந்து புரட்சியாளரை விடுவிக்கக் கோரியும், போலீசாரின் ஒடுக்கு முறையை எதிர்த்தும் விண்ணதிர கண்டன முழக்கம் செய்தனர்.

மாலையில் வானொலித் திடலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு வீரத்தாய் வாலாம்பாள் கலியபெருமாள் தலைமை வகித்தார். தமது தலைமை உரையில் அவர் தமது குடும்பத்தாரை அரசியல் நோக்குடன் வஞ்சம் தீர்ப்பதற்காக வெறிபிடித்த வேட்டை நாய் போல போலீசார் ஒடுக்கிய காட்டுமிராண்டித்தனத்தை கேட்போர் மனம் நெகிழ எடுத்துரைத்தார். புரட்சித் தோழர் தமிழரசனைப் பெற்றுத் தந்த வீரத் தாயும் தமது குடும்பத்தின் மீது ஏவப்பட்ட அடக்கு முறைகளை எடுத்துரைத்தார். புரட்சித் தோழர்கள் குமாரகுப்பன், ராமகிருஷ்ணன் ஆகியோரை புரட்சி இயக்கத்திற்கு தத்தம் செய்த வீரத் தாய்கள் இருவரும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். கூட்டந்தில் ஆர். கே. சாமிநாதன், வழக்குரைஞர் இப்ருகிம் பரமக்குடி சண்முகநாதன், டாக்டர் விஜயலட்சுமி, கோவை ஈஸ்வரன் ஆகியோர் உணர்ச்சி பொங்க உரையாற்றினர். நக்சல்பாரிகளை விடுதலை செய்ய வேண்டியதன் அவசியத்தையும், அவர்களின் விடுதலைக்கு உழைப்புவர்க்கம் போராட வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர். நக்சல்பாரி புரட்சியாளர்கள் தங்களின் விடுதலைக்காக யாசகம் கோரவில்லை. ஆனால் நாட்டின் விடுதலைக்கு அவர்களின் விடுதலை அவசியம் என்பதால் உழைப்பாளர்களும் ஜனநாயகத்தை விரும்புவோரும் அவர்களின் விடுதலைக்காக எழுச்சியுடன் போராடியே தீருவார்கள் எனச் சூளுரைத்தனர்.

## சேலத்தில் விடுதலைகோரி

## புரட்சி முழக்கம்

1-9-79 அன்று சேலம் சூலமங்கலம் பகுதியில் நக்சல் பாரிகளின் விடுதலையைக்கோரி மாபெரும் போராட்டப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. பெண்ணுடைத்தில் வெற்றிகரமாக நடைபெற்ற விடுதலை இயக்கத்தைக் கண்டு அலறிப்போன ஆளும்வர்க்க ரவுடிகள் சேலம் கூட்டத்தை பிசு பிசுக்கச் செய்யலாம் என்ற நப்பாசையால் வெறித்தனமாக செயல்பட்டனர். புரட்சி கீதங்களை ஒலிபெருக்கி பொறுத்தப்பட்ட ஊர்திகளில் ஒலிபரப்பக் கூடாது என தடை போட்டனர். முதல் நாள் இரவு கூட்டச் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த தோழர்கள் அறுவரை (கூட்டத் தலைவர் உட்பட) தங்கவேலு என்ற பணக்கார பயல் ஒருவன் உதவியோடு அவனின் வீட்டை கொள்ளையடிக்க முயன்றதாகப் பொய்வழக்கு ஒன்றை ஜோடித்து கைதுசெய்து லாக்கப்பில் கொடுமையாக அடித்து சிறையில் பூட்டினர். கொள்ளையடித்ததாகவும் திருடியதாகவும் பொய்வழக்குப் போட்டுள்ளனர். இந்தச் செய்தியை வானொலியில் ஒலி பரப்பியும் நாளிதழில் வெளியிட்டும்நக்சல்பாரி புரட்சியாளரை மக்கள் முன்னால் கொள்ளையர்களாகவும் திருடர்களாகவும் சித்தரிக்க முயன்றுள்ளனர். ஊர்மக்களை மிரட்டி அச்சுறுத்தி யாருமே மின்சாரம் தராதபடி தடுத்து கூட்டத்தை நிறுத்தி விடலாம் என பகற்கனவு கண்டனர். கம்புகளில் பெட்ரோமாக்ஸ் விளக்குகளைக் கட்டி தோழர்கள் கூட்டத்தை விடாப்பிடியாக நடத்தி போலீசாரின் சதியை முறியடித்தனர்.

கூட்டத்திற்கு தோழர் ஜெகன்னாதன் தலைமை வகித்தார். இக் கூட்டத்தில் வீரத் தாய் வாலாம்பாள் கலிய பெருமாள், வழக்குறைஞர் பி. வி பக்தவத்சலம், பி. வி. ராமானுஜம், டாக்டர் விஜயலட்சுமி தோழர் சத்தியன், கோவை ஈஸ்வரன் ஆகியோர் வீரமுழக்கம் செய்தனர். கூட்டத்தை ஏற்பாடு செய்த தோழர்களை அக்கிரமமாக திருட்டுப்பட்டம் சூட்டி கைது செய்த ஆளும் வர்க்கப் போலீசின் ஈனங்கெட்ட செயலுக்கு சாட்டையடி கொடுத்தனர். ஒடுக்கு முறைகளுக்கு அஞ்சோம்; நக்சல்பாரிகளின் விடுதலையைக் கோரி போராடியே தீருவோம் என நெஞ்சுயர்த்தி இடி முழக்கம் செய்தனர். இந்த ஜனநாயகத்தைப் பற்றி நாவறளக் கூச்சலிடும் சுரண்டும் வர்க்க சண்டாளர்கள் ஆட்சியில் சுவரொட்டி ஒட்டவும் உரிமை கிடையாது என்பதை எடுத்துரைத்தனர். சேலம் சிறையில் தனது இளைய மகனை காணச் சென்றபோது பேட்டி கொடுக்க மறுத்த சிறை அதிகாரிகளின் கொடுமையை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாலாம்பாள் அவர்கள் எடுத்துரைத்தார். கசாப்புக்கடை ஆடுகளைப்போல எனது மகன் களையோ கணவனையோ வெறிபிடித்த நீங்கள் சிறையில் கொன்றழித்தால் கூட நாங்கள் அஞ்சிட மாட்டோம். அந்தவீர மறவர்கள் மக்களுக்காக மடிந்தார்கள் என நாங்கள் மகிழ்ச்சியடைவோம். அவர்கள் தியாகத்தில் இன்னும் ஆயிரமாயிரம் புரட்சி மறவர்கள் பூத் தெழுவர் என வாலாம்பாள் அம்மையார் வீரச் சூளுரைத்தார்.

கூட்டம் போடுவதால் மட்டுமே நக்சல் பாரி புரட்சியாளரை விடுவித்து விடுவார்கள் என்று நாங்கள் நம்பிடவில்லை. ஆனல் இந்த இயக்கத்தை நடத்தி மக்களை தட்டி எழுப்பி நக்சல்பாரிகளை விடுவிக்காமல் தலை தப்பமுடி யாது என்ற அளவுக்கு ஆளும்வர்க்க அயோக் கியர்களுக்கு நெருக்கடியைத் தோற்றுவிக் கவே நாங்கள் தெருவில் இறங்கி மக்களைத் திரட்டுகிறோம் என சொற்பொழிவாளர்கள் போர்க்குரல் ஒலித்தனர். நக்சல் பாரி புரட்சி யாளரின் விடுதலையைக் கோரி கூட்டத்தில் திரண்டிருந்த ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக் கள் உற்சாக எரிமலைகளாக கோஷமிட்டனர்.

## தர்மபுரியில் இடிமுழக்கம்

2.9.79 அன்று தர்மபுரியில் அரசியல் கைதிகள் விடுதலை இயக்கத்தின் சார்பில் நக்சல்பாரி புரட்சியாளரின் விடுதலையைக் கோரி மாபெரும் போராட்டப் பொதுக்கூட்டம் ஒன்று வெற்றிகரமாக நடந்தேறியது. சேலத்தைப் போலவே இங்கும் போலீசார் கூட்டத்தை நடத்தாதபடி தடுக்க நடவடிக் கைகளில் இறங்கினர். கூட்டத்தில் கலந்து கொள்ள சுற்றுப்புற கிராமங்களிலிருந்து மக் கள் மாட்டு வண்டிகளில் வந்து திரண்டனர். முதல்நாள் வரை ஊர்வலம் நடத்தலாம் என- வாயளவில் இசைவு தெரிவித்த காவல்துறை யினர் கூட்டநாளன்று ஊர்வலம் நடத்தக் கூடாது என தடைபோட்டனர். புரட்சி கீதங்களை ஒலிபரப்பக்கூடாது என தடை போட்டனர். ஆயிரக்கணக்கில் திரண்ட மக்களோ கோபம் கொப்பளிக்க மைதானத் தில் கூடி போலீஸ் ஒடுக்குமுறை ஒழிக என ஓங்கார முழக்கமிட்டனர். முதலாளித்துவ ஜனநாயகத்தின் முகத்திரை கிழிய அதன் மூதேவி முகம் நோக்கி மக்கள் காறி உமிழ்ந் தனர்.

மாலையில் பொதுக்கூட்டம் தொடங்கியது கூட்டத்திற்கு நாதரசம்பட்டி புரட்சித்தோழர் கோபாலின் தாயான வயதான மூதாட்டியார் தலைமை வகித்தார். தமக்கே உரிய கிராமப் புற நடையில் தமது குடும்பத்தினருக்கு இழைக்கப்பட்ட அக்கிரமங்களை அந்த அம் மையார் அழகுற எடுத்துரைத்தார். வீரப் புளியம்பட்டி தீரர் திம்மகாளியின் புதல்வியார், ஆம்பள்ளி முனிராஜின் அன்னையார், வாலாம் பாள் கலியபெருமாள் ஆகியோரும் தத்தம் குடும்பங்கள் மீது ஏவப்பட்ட மனிதத் தன்மை யற்ற காட்டுமிராண்டித்தனமான தாக்கு தல்களைப் பாங்குறப் படம்பிடித்துக் காட்டினர். கூட்டத்தில் டாக்டர் விஜயலட்சுமி வழக் குரைஞர் ஜெயபால், பி.வி. ராமானுஜம் கோவை ஈஸ்வரன் ஆகியோர் போர்ப்பரணி பாடினர். இவர்கள் தங்கள் உரையில் போலீ சாரின் ஒடுக்குமுறைகளுக்கு கண்டனம் தெரி வித்தனர். இந்த நாட்டில் ஜனநாயகமோ சதந்திரமோ இல்லை என்பதை எடுத்துரைத் தனர். மேலும் மேலும் பாசிச அடக்கு முறைகள் வளர்ந்துவரும் இன்றைய சூழலில் மக்கள் மீது ஏவப்படும் வெறித் தாக்குதல்கள், வர்க்கப்போராட்டங்களை நசுக்கும் நோக் குடன் தொடுக்கப்படும் கொலைகாரத் தாக்கு தல்கள் ஆகியவற்றை எதிர்த்து மக்களைத் திரட்டி போராட வெகுஜன அமைப்புகளை கட்டி வளர்க்க அறைகூவல் விடுத்தனர்.

பாலக்கோடு வகுப்புக் கலவரத்திற்கு நக்சல்பாரிகளே காரணம் என்ற ஆளும் வர்க்க சதிகாரர்களின் உள்நோக்கம் கொண்ட விஷமத்தனமான அவதூறை அம்பலப்படுத் தினர். இந்நிகழ்ச்சி தொடர்பான கொலை வழக்கில் வழக்குரைஞர் ஞானத்தை திட்ட மிட்டுப் பொய்யாகச் சேர்த்து கைதுசெய்த கயமைத்தனத்தைக் கண்டித்தனர். நக்சல் பாரி அரசியல் புரட்சியாளரை விடுதலை செய் என்று வீரமுழக்கமிட்டனர். பெரோல் தர மறுப்பது, பேட்டி தர மறுப்பது, தணிக்கை என்ற பெயரால் கடிதங்களை தர மறுப்பது, இருபத்து நான்கு மணி நேரமும் லாக்கப்பில் அடைப்பது போன்ற சிறைக்கொடுமைகளை அம்பலப்படுத்தினர். அப்பு, சீராளன், செல் லப்பன் போன்றோரை திட்டமிட்டுக் கொன்ற போலீஸ் காட்டுமிராண்டிகளின் கொலைபாதகங்களை தோலுரித்துக் காட்டினர். நாடெங்கும் சமுதாய மாற்றத்திற்காக நடை பெற்று வரும் புரட்சிகரப் போராட்டங்கள் மக்களின் போராட்டங்கள், விவசாயிகள் போராட்டம் மாணவர் போராட்டம், போலீ சார் போராட்டம், சிறைக் கைதிகள் போராட் டம் ஆகியவற்றையும் அவற்றின் அரசியல் பின்னணியையும் படம்பிடித்துக் காட்டினர்.

நடைபெற்ற இக்கூட்டங்கள் நாடுமுழு வதும் நக்சல்பாரி புரட்சியாளரின் விடுதலைக் கான போராட்டம் புதிய வேகத்துடன் புது முறுக்குடன் தாவிப்பாய்ந்து முன்னேறத் தொடங்கிவிட்டது என்பதைக் காட்டுகிறது. இது நல்லதோர் ஆரம்பம். ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுதந்திரமாம் சுதந்திரம்!

இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின்னர், தங்கள் நாட்டில் உள்ள அந்நிய எஜமானர்களை வெளியேற்ற வேண்டும் என்று காலனி நாட்டு மக்கள் உறுதி பூண்டதை ஏகாதிபத்திய நாடுகள், முக்கியமாக மிகப் பெரிய காலனி ஆதிக்கப் பேரரசாக விளங்கிய பிரிட்டன், சந்திக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. காலனி ஆதிக்க சகாப்தம் முடிவு அடைந்துவிட்டது. முதலில் இது உணரப் படவில்லை. டச்சுக்காரர்கள், பிரெஞ்சுக்காரர்கள், மலேயாவில் இருந்த பிரிட்டிஷ்காரர்கள் அனைவரும் ராணுவ சக்தி மூலம் தங்கள் நிலையைப் பாதுகாத்துக்கொள்ள தங்களால் எது வரை முடியுமோ, அதுவரை முயன்றார்கள். இறுதியில், காலனி ஆதிக்க ஆட்சியை (நாம் அனைவரும் இப்போது சமம்) யாரிடம் பிரிட்டிஷ் அதிகாரம் "கொடுக்கப்பட்டது?" மக்களிடம் அல்ல — ஒரு உள்நாட்டு உயர்வர்க்கத்திடம் கொடுக்கப்பட்டது. வணக்கம் தெரிவிக்கும் வகையில் யூனியன் ஜாக்கொடி இறக்கப்படுகிறது; புதியகொடி ஏற்றப்படுகிறது... ......மற்றொரு "சுதந்திர" நாடு ஒரு பிரகாசமான எதிர்காலத்தை நோக்கி செலுத்தப்படுகிறது. அதன்பின் நாடு திரும்பிய அவர்கள், தாங்கள் முதலில் எப்போதும் எடுத்திருக்க முடியாத ஒன்றை திருப்பிக் கொடுத்தது பற்றிய தங்கள் அறிவையும் பெருந்தன்மையையும் பற்றி, தாங்களே பெருமைப்பட்டுக் கொள்வதை விட்டுவிட மாட்டார்கள்.

---

(இக்கட்டுரை பெலிக்ஸ்கிரின் (Felex Greene) எழுதியுள்ள "The Enemy" என்ற புத்தகத்தில் உள்ள ஒரு கட்டுரையின் மொழியாக்கம்.)

---

தொடர முயற்சிப்பது இனி அனுமதிக்கப் படாது என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இருந்தாலும் காலனி ஆதிக்கத்தால் கிடைக்கப் பெற்று வந்த அளவற்ற லாபங்களை வேண்டாமென்று அவர்கள் விட்டு விடுவார்களா? காலனி நாட்டு மக்களின் தொடர்ந்த கோரிக்கைகளைச் சந்தித்த அவர்கள், வெள்ளை மாளிகையின் தந்திரக்கார மனிதர்களால் தயாரித்துக் கொடுக்கப்பட்ட ஒரு புதிய யுத்த தந்திரத்தை முன் வைத்தனர்.

"சரி!" "நாங்கள் அந்த மக்களுக்கு அவர்களுடைய சுதந்திரத்தை அளிக்கிறோம்! ஆனால் எங்களுடைய கட்டுப்பாட்டை எளிதில் வெளிப்படாத வடிவத்தில் தொடர்ந்து நீடிப்பதில் நாங்கள் உறுதியாக இருப்போம். ஆனால் அதை குறிப்பிட்ட பாணியில் நாங்கள் நிறைவேற்றுவோம்" என்று கொண்டார்கள். எனவே, ஒருநாடு பிரிட்டிஷ் காலனியாகஇருந்தால், அந்த நாட்டு "சுதந்திரதின" விழா நிகழ்ச்சிகளில் பிரிட்டிஷ் அரச குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் கலந்து கொள்வார்; "அந்த நாட்டு மக்களுடன்" அவர் நடனமாடும் போது போட்டோ எடுக்கப்படுவார்.

ஆனால் உண்மையில் பிரிட்டனும் மற்ற காலனி ஆதிக்க சக்திகளும் உள்ளடக்கத்தைக் காப்பாற்றிக் கொள்கின்ற அதே சமயத்தில், அதிகமாக எதையும் — வடிவம், பெருமை ஆகியவற்றில் — கைவிட்டு விடவில்லை. அவர்கள் தங்களுடைய தலைவலியைத்தான் கைவிட்டுள்ளார்கள். அதைத் தவிர வேறு எதையும் விட்டு விடவில்லை. பிரிட்டன் இன்று இந்தியாவிலிருந்தும் கென்யாவிலிருந்தும் பிற முன்னாள் காலனிகளிலிருந்தும் மிக அதிகமான லாபத்தை, எப்போதும் எடுப்பதுபோல, நிர்வாகத் தொந்தரவு இல்லாமலேயே எடுத்துக் கொண்டிருக்கிறது.

பொருளாதாரம் மற்றும் பிறவழிகள் மூலம் ஒரு முன்னாள் காலனி மீதான தொடர்ந்த கட்டுப்பாடே நவீன காலனியாதிக்கத்தின் அடிப்படையாகும்.

புதிய அரசு, பெயருக்குச் "சுதந்திரமாக" இருந்தபோதிலும், கடனால் இன்னும் தன்னைப் பிணைத்துக் கொண்டிருக்கிறது.

தொடர்ந்து அது தன்னுடைய மதிப்பு வாய்ந்த அந்நியச் செலவாணியை அந்நிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 'பாச'த்தின் துடிப்பு

'சுதந்திரம்' பெற்றபோது கவர்னர் ஜெனரலாக இருந்த பிரிட்டிஷ் அரச குலத்தைச் சேர்ந்த மவுண்ட் பேட்டன் பிரபு மரணம் அடைந்துள்ளார். இவரது மரணத்திற்கு பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுதலை கோரும் அயர்லாந்து விடுதலைப் படையினர் — கொரில்லாக்கள் காரணம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இவரது மரணம் குறித்து இந்திய ஆளும் வர்க்கத் தலைவர்களான ஜெ. பி., கிருபாளனி, மொராஜி, சரண்சிங், இந்திரா, சஞ்சிவிரெட்டி ஆகிய அனைவரும் 'ஒப்பாரி' வைத்துள்ளனர். இந்தியா ஒரு உண்மையான சிறந்த 'நண்பரை' இழந்து விட்டதாகவும், 'சுதந்திரம்' பெறுவதில் மௌண்ட்பேட்டன் பிரபுவின் பாத்திரம் 'மகத்தானது' என்றும், வகுப்புக் கலவரமும், மதக் கலவரமும் நாட்டை பிரிக்கவேண்டும்என்று எண்ணமும் நிலவியகாலத்தில் சிறந்த முறையில் 'பணி'யாற்றியவர்என்றும் இவர்கள் தங்களது அறிக்கைகளில் ஒருமித்த கருத்தை தெரிவித்துள்ளனர்.

இந்தியாவில் மதக் கலவரம் வகுப்புச் சண்டை, நாட்டைப் பிரிக்கும் எண்ணம் ஆகியவற்றுக்கு தூபம் போட்டது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகள் என்பதே அறிஞர்களும் வரலாறும் போதிக்கும் பாடமாகும்.

இந்த வரலாற்று உண்மையை மறுத்து ஆதி காலத்திலிருந்தே பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அடி வருடிகளாகவேசெயல்பட்டுவந்த மவுண்ட் 'பாட்டனி'ன் பௌத்திரர்களாகிய இந்த தலைவர்களும் அவர்களது அரசும் ஏழு தினங்கள் 'துக்கம்' கொண்டாடியும், வானொலியில் வீணையை 'ருவி'யும், பக்தி பாடல்களைப் போட்டும் மக்களை அறுத்து விடுகிருர்கள். இவர்கள் தொடர்ந்து ஏகாதிபத்தியதாசர்களாகவே செயல்படுகிருர்கள் என்பதையே இந்த நிகழ்ச்சிகள் காண்பிக்கின்றன. ★

முதலிட்டாளர்களுக்கு வட்டியையும், லாபத்தையும் செலுத்தவே பயன்படுத்த வேண்டியிருக்கிறது.

பிரகாசமான எதிர்காலம் இன்னும் வரவில்லை; ஏனென்ருல் அந்த முன்னுள் காலனி நாடு தன்னுடைய உபரியை தன்னிடம் தக்க வைத்துக்கொள்ளவும், மூலதனத்தை உருவாக்கவும் அல்லது தனது சமுதாயத்தின் நிலவுடமை அமைப்பைத் தகர்த்து எறியவும் சாதகமான ஒரு நல்ல சூழ்நிலையில், அதனை அரசியல் "சுதந்திரம்" விட்டுவைக்கவில்லை.

ஏராளமான மக்கள் தங்களுடைய வயது முதிர்ந்த வறுமையுடன்தான் விட்டு வைக்கப் பட்டுள்ளனர்கள்.

முன்னுல் காலனி நாடுகளில் உள்ள மக்களில் 95 சதவிதத்தினருக்கு "சுதந்திரம்" ஒரு சிறு வித்தியாசத்தையும் தரவில்லை. அவர்கள் எப்போதும் இருந்தது போலவே, இன்னும் பசியுடனும், ஏழையாகவும்தான் இருக்கிருர்கள்.

"உதவி" அளிக்கப்படுவதைப் பொறுத்த மட்டில்—உயர் பரம்பரையைச் சேர்ந்தவர்களே (நகர்ப்புறமயமாகிவிட்ட செல்வர்களும், அவர்களின் தொங்கு சதைகளும், பெரிய நிலப்பிரபுக்களும்) "சுதந்திரத்தினுல்" லாபம் அடையலாம்.

அவர்களால் இப்போது தங்களுடைய முன்னுள் எஜமானர்கள் நேரடியாக இங்கு இல்லாமல் இயங்க முடியும்.

அவர்கள் முன்பு எப்போதும் செய்தது போலவே, சில சமயங்களில் முன்பைவிட அதிகமாகவே, தங்கள் சொந்த மக்களைச் சுரண்டி வருகிருர்கள்.

அவர்கள் இப்போது உயர்த்த நிலைஅடைகிருர்கள். அவர்கள் தான் இப்போது உயர்ந்த பையன்கள்; நாட்டின் உள்ளேயுள்ள நிதி மூலதனத்தை அவர்கள் பெற்றுள்ளார்கள்.

அவர்களில் வெளிநாடுகளில் படித்து திரும்பிய பலர், அந்நியர் நீடிப்பதால் ஏற்படுகின்ற தடைகள் இல்லாமல் தங்களுடைய உயர்ந்த படிப்பாலும், மேலை நாட்டுக்காரர்களின் வழிகளில் அமைந்த அறிவாலும் அமைந்த அதிகாரத்தை இப்போது செயல்படுத்த முடிகிறது.

முன்னுள் காலனி நாடுகளைச் சேர்ந்த விவசாயிகளும், தொழிலாளிகளும் எப்போதும் இரண்டு எதிரிகளை—தங்களுடைய அந்நிய எஜமானர்களை, தங்கள் சொந்த ஆளும் வர்க்கம் ஆகியோரை—எதிர்த்துப் போராடுவதற்குப் பெற்றுள்ளார்கள். இன்னும் அவ்வாறே பெற்றிருக்கிருர்கள்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தங்களுடைய முன்னுள் காலனி நாடு களுக்கு ''சுதந்திரம்'' அளிப்பது என்பது ஏகாதிபத்திய நாடுகளுக்கு மற்ருெரு சாதகத்தையும் அளித்துள்ளது.

இந்த ''சுதந்திரம்'' பெரும் அளவு கற்பனையாகவே இருப்பினும்கூட, இந்தப் புதிய நிலை சில தந்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான குறைந்தது சில வாய்ப்புகளையாவது—நேரடி காலனி ஆட்சியில் உள்ள ஒரு நாட்டில் கிடைக்காத வாய்ப்புகளை—அளிக்க வேண்டும் என்பது முதலிலேயே தெளிவாகிறது.

இது அருகில் உள்ள பகுதிகளுக்கும், முக்கியமற்ற பகுதிகளுக்கும் உண்மையாக அமையலாம். லாரன்ஸ் ஒயிட்ஹெட் (Lawrence Whitehead) என்பவர் பின்வருமாறு சுட்டிக் காட்டுகிருர்:

''இந்த வளர்ந்த சுயாட்சி (autonomy), சில வழிகளில், சாதகமானதுதான்—ஆனுல் அதிகாரத்தின் உண்மையான பங்கீட்டைப் பற்றிய உணர்வு குறைகின்ற ஒரு சாதகமற்ற தன்மையையும் அது தன்னுடன் கொண்டு செல்கிறது. நவீனகாலனிஆதிக்கம் என்பது ஒருமிகவும் நிலையான ஆதிக்க முறையாக இருக்கலாம்; ஏனென்ருல் அது மிகவும் முன்னும் பின்னும் விட்டுக்கொடுக்கக் கூடியது (ஆனுல் அவசியமானதைப் பாதுகாப்பதில் பலாத்காரமாகவே இருக்கிறது); மேலும் அது அந்நியர்களுக்கும் காலனிக்கும் இடையில் உள்ள மோதலை, ஆளப்படுகின்ற மக்களுக்கு இடையிலான ஒரு உள்நாட்டுப் பிரச்சனையாக அடிக்கடி மாற்ற முடிகிறது. நவீன காலனி ஆதிக்கத்தை எதிர்த்து மக்களை ஒன்றுபடுததுவது என்பது ஒருவெளிப்படையான காலனி ஆட்சியை எதிர்த்து அணிதிரட்டுவதைவிட மிகமிகக் கடினமாகும்.''

ஏகாதிபத்திய சக்திகள் தங்களுடைய மிகப்பெரிய மோசடித்தன்மையை, ''சுதந்திரம்'' அளிப்பதைத் தங்களுக்குச் சாதகமாக அமைத்துக்கொள்ள மேற்கொள்கிற செயல்களில் சில சமயங்களில் வெளிக் காட்டுகிருர்கள்.

அதற்கு இரண்டு எடுத்துக்காட்டுகள்.

முதலாவது, அமெரிக்கா பிலிப்பைன்ஸுடன் ஏற்படுத்திக் கொண்ட வியாபார ஒப்பந்தம் சம்பந்தப்பட்டது. இந்த ஒப்பந்தத்தின் கீழ், இரண்டு நாடுகளும் எந்தவகையிலும் ஒன்றுடன் ஒன்று வேற்றுமை காட்டக் கூடாது என்று ஒப்புக்கொள்ளப்படடது. மிக அழகானது! மிக நேர்மையானது! அமெரிக்கா பிலிப்பைன்ஸ் இரண்டும் ஒரு முழுமையான சமத்துவ அடிப்படையில் கொள்ளப்பட வேண்டும்.

இரண்டு நாடுகளின் பொதுத்துறையில் உள்ள எல்லா விவசாய நிலங்கள், மரம் வளரும் நிலங்கள், தாதுப்பொருள் உள்ள மண் பகுதி, நிலக்கரி, பெட்ரோலியம் மற்றும் பிற எண்ணெய்ப் பொருள்கள், இயக்கு சக்தி சம்பந்தப்பட்ட எல்லா மூலாதாரங்கள் மற்றும் பிற இயற்கைச் செல்வங்கள் ஆகியவற்றை விநியோகிப்பது, பயன்படுத்துவது, வளர்ப்பது போன்றவற்றிலும் பொதுத்துறை நிறுவனங்களைப் பயன்படுத்துவதிலும், ஒரு நாட்டு மக்

---

## 'தாயி'ன் மணிக்கொடி ப..ரீர்!

1952-ம் வருடம். முதல் பாராளுமன்றத் தேர்தல்கள் முடிந்து பார்லிமெண்டு உறுப்பினர்கள் அனைவரும் முதல் நாள் கூட்டப்பெற்ற சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள பார்லிமெண்டுக்குச் சென்ருேம். அங்கே பார்லிமெண்டு கட்டிடத்தில் பட்டொளி வீசிப் பறந்துகொண்டிருந்தது கொடி ஒன்று. நமது தேசியக் கொடியான மூவர்ண கொடியா அது. அல்ல. பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சாம்ராச்சிய கொடியாகிய யூனியன் ஜாக் கொடிதான் 'ஜாம்' 'ஜாம்' என்று பறந்து கொண்டிருந்தது. ஒரு வேளை பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் தான் நாம் நுழைந்து விட்டோமோ என்ற அதிர்ச்சிதான் எங்களுக்குஏற்பட்டது. உள்ளே சென்றகம்யூனிஸ்டு உறுப்பினர்களும், சோசலிஸ்டு கட்சி உறுப்பினர்களும், காங்கிரஸ் கட்சியினர் சிலரும் செய்த அமர்க்களத்திற்குப் பிறகுதான் யூனியன் ஜாக் கொடி இறக்கப் பெற்று மூவர்ண தேசிய கொடி ஏற்றப்பட்டது.

(பூபேஷ் குப்தாவின் கட்டுரையிலிருந்து எடுக்கப் பெற்றது—நன்றி. ஜனசக்தி.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



களுக்கு உரிமை, அடுத்த நாட்டு மக்களுக்கும் உண்டு.

அமெரிக்காவின் கம்பெனிகள் இந்த ஒப்பந்தத்தின்கீழ், பிலிப்பைன்ஸில் எந்த வியாபாரத்தையும் சுதந்திரமாக நிறுவலாம்; தாதுப்பொருள் சம்பந்தப்பட்ட உரிமைகள், எண்ணெய்க்கிணறுகள், விவசாய நிலங்கள், மரங்கள் ஆகியவற்றை விலைக்கு வாங்கமுடியும்; அங்குள்ள இயக்கு சக்தியின் எல்லா மூலாதாரங் களையும் சுரண்ட முடியும். பொதுத்துறை நிறுவனங்களை இயக்க முடியும். பெரிய கரடி சிறிய கரடியை உண்ண முடியும். மேலும் சிறிய கரடியும் பெரிய கரடியை உண்ணுவதற்கு உரிமையுண்டு.

எனவே பிலிப்பைன்ஸ் கம்பெனிகளும் அமெரிக்காவில் மேற்கண்டதுபோல் செய்ய முடியும். அவை வெஸ்டிங் ஹவுஸ் (Westing house) ஜெனரல் எலெக்ட்ரிக் ஆகிய கம்பெனிகளை விலைக்கு வாங்கமுடியும்; எண்ணெய்க் கம்பெனிகளை எடுத்துக்கொள்ள முடியும்; பெல் டெலிபோன் கம்பெனியில் (Bell Telephone Company) ஆதிக்க நலனை பெறமுடியும்.

---

## சரண்சிங் திருடன் !

1977-ம் வருடம் ஜூன் மாதத்தில் அப்பொழுது உள்துறை அமைச்சராக இருந்த சரண்சிங் பழைய பாரதீய லோக்தளம் தனது தேர்தல் சின்னத்தை ஜனதாக் கட்சிக்குத் தருவதாக தெரிவித்து எழுதிய கடிதத்தை பையிலிருந்து அகற்றி விட்டார் என்பதையும் அந்தப் பிரச்சனை பார்லிமெண்டிலும், பகிங்கிரமாகவும் எழுப்பப்பட்ட பிறகு கடிதம் மீண்டும் பையில் வைக்கப்பட்டது. அந்தப் பையிலிருந்து கடிதத்தை சட்ட விரோதமாக சரண்சிங் அகற்றியது பற்றி அப்போதைய பிரதமர் மொரார்ஜி கடுமையாகக் கருதினர்.

—ராமகிருஷ்ண ஹெக்டே
பொதுச் செயலாளர், ஜனதாக் கட்சி.

விவசாய நிலங்களை விலைக்கு வாங்கமுடியும்; மேலும் இவை போன்றவற்றை செய்ய முடியும். மகத்தான ஒப்பந்தம்! சமத்துவத்தின் மிகப்பெரிய அடிப்படை!

இந்த "சமத்துவத்தின்"—அநேக மக்களின் கண்களில் படாமல் தப்பிச் செல்கின்ற இன்னெரு கோணத்தை ஹாரி மாக்டாப் (Harry Magdoff) சுட்டிக்காட்டியுள்ளார். "பொதுத்துறையில் உள்ள தாதுப்பொருள்களின் நிலப்பகுதி" என்ற சொற்கள் இங்கு ஒரு விசேஷப் பொருளை பெற்றுள்ளன; ஏனென்ருல் தாதுப்பொருள் சம்பந்தப்பட்ட உரிமைகளில் பிலிப்பைன்ஸ் சட்டம் ஆங்கிலோ—சாக்ஸன் (Anglo-Saxon) மரபை பின்பற்றுவதற்குப் பதிலாக ஸ்பெயின் சட்டத்தைப் பின்பற்றுகிறது. அதாவது மண்ணுக்கு அடியில் உள்ள தாதுப்பொருள்கள் பிலிப்பைன்ஸில் பொதுத்துறைச் சொத்தாகும்; அமெரிக்காவில் அவை நிலத்தின் சொந்தக்காரர்களுக்கு உரிமையானதாக இருப்பது போல பிலிப்பைன்ஸில் இல்லை.

எனவே அமெரிக்க வியாபார நிறுவனங்கள் பிலிப்பைன்ஸில் எங்கும் சுரங்கங்களை உருவாக்கலாம்; அதற்குப்பதிலாக, பிலிப்பைன்ஸ் கம்பெனிகள் அமெரிக்காவில் "பொதுத்துறையில்" எல்லோவ்ஸ்டோன் நேஷனல் பார்க் (Yellostone National Park) அல்லது யாஸ்மைட் (Yasmyte) ஆகியவற்றில்—உள்ள நிலங்களை பயன்படுத்த முடியும்!

ஒரு ஒப்பற்ற, வியப்புக்குரிய, 'சமத்துவ' ஒப்பந்தம்! (அமெரிக்க முதலீட்டாளர்கள் தாங்கள் பெற்ற சாதகங்களை விரைவில் நடைமுறையில் பெற முயன்றனர். அமெரிக்க முதலீடு 1962-ல் 375 மில்லியன் டாலர்களாக யிருந்தது. மூன்று வருடங்களில் 529 மில்லியன் டாலர்களாக உயர்ந்தது).

இரண்டாவது எடுத்துக்காட்டு, சில ஐரோப்பிய அரசுகள் தங்களுடைய முன்னுள் காலனிகளாக இருந்த ஆப்பிரிக்க அரசுகளுடன் செய்துகொண்ட ஒப்பந்தம்! இது 1963-ம் ஆண்டு ஜூலையில் யாவுண்டெ (Yaounda) என்னும் இடத்தில் E. E. C. யின் (பொது மார்க்கெட் என்று அழைக்கப்படுவது) ஆறு ஐரோப்பிய நாடுகளுக்கும், ஏதாவது ஒரு ஐரோப்பிய நாட்டின் முன்னுள் காலனியாக இருந்த பதினெட்டு ஆப்பிரிக்க அரசுகளுக்கும் இடையில் கையொப்பம் ஆகியது. (E. E. C. நாடுகளில் லக்ஸம்பெர்க் (Luxemburg) மட்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 'அது-வேறு'-'இது வேறு'

வரப் போகும் இடைக்காலத் தேர்தலில் தமிழ் நாட்டில் அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகம் எந்த கூட்டணியிலும் சேருவது வேறு. மத்தியில் சரண்சிங் அரசாங்கத்துக்கு அது அளித்து வரும் ஆதரவு வேறு.

எம். ஜி. ஆர்.

—தினமணி

டும் ஆப்பிரிக்க நாடுகளை முன்னாள் காலனியாக கொண்டு இருக்கவில்லை).

யாவுண்டெ ஒப்பந்தப்படி, (அதனுடைய உண்மையான விவரங்கள் சிக்கலானது; இங்கு அவை விவாதிக்கப்படவில்லை) பதினெட்டு நாடுகளிலும் வியாபாரங்களை நிறுவ ஆறு ஐரோப்பிய நாடுகளின் மக்களுக்கும், கம்பெனிகளுக்கும் மிக அதிகமான சுதந்திரத்தை அளிக்கவேண்டும்; அதற்குப் பதிலாக, நிச்சயமாக, ஆப்பிரிக்க அரசுகளும் ஐரோப்பாவில் தங்கள் ஆலைகளை நிறுவ அதே அளவு சுதந்திரம் உண்டு!

மேலும் பதினெட்டு ஆப்பிரிக்க நாடுகளும் முதலீட்டைப் பாதிக்கின்ற எந்த பரிமாற்றுத் தடைகளையும் (exchange restrictions) ஏற்படுத்தாது என்றும் ஒப்பந்தம் கூறுகிறது. அதுபோல இந்த பதினெட்டு அரசுகளும் அந்த ஆறு நாடுகளில் சமமான உரிமையுடன் முதலீடு செய்யலாம். நடைமுறையில் இதன் பொருள் என்னவென்றால், ஆப்பிரிக்காவின் பதினெட்டு அரசுகளும், ஐரோப்பாவின் ஆறு அரசுகளும் சுதந்திரமான வியாபாரப் பிரதேசம் என்ற ஒன்றை உருவாக்கியுள்ளன— இந்தப் பெரிய வியாபாரப் பகுதியில் வியாபாரமும், மூலதனமும் தடையில்லாமல் நுழையலாம்.

ஐரோப்பாவின் ஆறுநாடுகள் மிக அதிகமான நிதியைப் பெற்றிருப்பதாலும், ஆப்பிரிக்காவின் பதினெட்டு நாடுகளும் ஒன்றும் பெற்றிருக்காததாலும், இந்த "சமத்துவ" ஓட்டம் எந்தத் திசையில் நடைபெற முடியும் என்பதைப் பார்ப்பது கடினம் அல்ல.

இந்த "சமத்துவ" ஒப்பந்தம் தற்போது நீடிக்கின்ற உழைப்புப் பிரிவினை அப்படியே நீடிக்கச் செய்யும்; ஏனென்றால் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள கட்டுப்பாட்டுதடைகள் (tariff barriers) இல்லாமல், ஆப்பிரிக்க அரசுகள் முன்னேறிய ஐரோப்பிய நாடுகளின் போட்டிக்கு எதிராக புதிய தொழில்களை நிறுவுவது சாத்தியமல்ல. அரைக் காலனித்துவ, வளர்ச்சி குன்றிய நாடுகள் அடிப்படை மூலப் பொருள்களை அளிப்பதைத் தொடர்ந்து நீடிக்கும்—அவை ஏழையாகவே நீடிக்கும்— முன்னேறிய நாடுகள் தாங்கள் சொல்கின்ற அடிப்படையில் மூலப் பொருள்களைப் பெறுவதைத் தொடரும்—அவை செல்வமுள்ள நாடாக மாறுவதைத் தொடரும்.

ஆப்பிரிக்க நாடுகளின் "பதினெட்டுப் பிரதிநிதிகளும்" இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள் என்ற உண்மை, மொத்த ஏற்பாட்டுக்கும் ஒரு சட்டபூர்வமான, பரஸ்பர தன்மைகளை அளிக்கிறது. ஆனால் அவர்கள் அவர்களுடைய நாட்டின் விவசாய வெகுஜனங்களின் "பிரதிநிதிகளாக" எப்படியானார்கள்?

இந்த இரண்டு ஒப்பந்தங்களும் நவீன காலனித்துவம் என்றால் என்ன என்பதற்கு உதாரணங்களாகும். எவ்வாறு முன்னேறிய நாடுகள், பெயரளவில் "சுதந்திரத்தை" அளித்தபோதிலும், காலனித்துவம் அளிக்கின்ற பொருளாதார லாபங்களை கைவிடாமல், ஆனால் பல்வேறு வழிகளில் அதை வேறு ஒரு திரையின்கீழ் நீடிக்கச் செய்திருக்கின்றன என்பதற்கு உதாரணங்களாகும். ஏகாதிபத்தியத்தின் மிகப்பெரிய உறிஞ்சுகுழல்கள் இன்றும் துண்டிக்கப்படவில்லை. ●

## முரண்பாடா?..,அல்ல

தமிழக இந்திரா காங்கிரசுடன் தி. மு. க. பேச்சு நடத்தி வருகிறது. ஜனதாவுடனும் தேர்தலில் உடன்பாடு கொள்ள தி. மு. க. பேச்சு நடத்துகிறது. ஜனதா, இந்திரா காங்கிரஸ் ஆகிய இரு கட்சிகளுடனும் பேச்சு நடத்துவதில் "முரண்பாடு" உள்ளதாக எனக்குத் தெரியவில்லை.

—கருணாநிதி)

(தினமணி)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்சிய தத்துவம்

# பருப்பொருளும் மனமும் (1)

## (MATTER AND MIND)

ஆன்மா என்ற சொல்லை நம்மிடையே பலர் அடிக்கடி பயன்படுத்துவதைக் கேட்கலாம். யாராவது இறந்து விட்டால், சிலர் அவர் ஆன்மா சாந்தி அடையட்டும் என்று வேண்டுவதைப் பார்க்கலாம். வேறு பல சூழ் நிலைகளிலும் இந்த ஆன்மா என்ற சொல் பயன் படுத்தப்படுகிறது.

ஆன்மா என்றால் என்ன? அதற்கும் உடலுக்கும் என்ன உறவு? இவை தத்துவத்தில் மிக அடிப்படையான கேள்விகளாகும். இவற்றிற்கான விடைகளை அளிப்பதில் பொருள் முதல் வாதமும் கருத்து முதல் வாதமும் எவ்வாறு மாறுபட்டு நிற்கின்றன என்பதை இக் கட்டுரையில் நாம் காணலாம்.

### ஆன்மா பற்றிய மூட நம்பிக்கைகள்

ஒருவன் தொடர்ந்து தீயசெயல்களில் ஈடுபடுகின்றான் என்று கொள்வோம். அவனைப் பற்றி ஒரு கிறிஸ்தவப் பாதிரியாரிடம் நீங்கள் கேளுங்கள். "ஏன் அவன் அவ்வாறு தீயவனாக இருக்கிறான்" என்று. அவர் என்ன கூறுவார் தெரியுமா? "அவன் உடலில் கெட்ட ஆன்மா—ஆவி—குடிபுகுந்து இருக்கிறது" என்று கூறுவார். அதனை விரட்டுவதற்குப் பிரார்த்தனை செய்யவேண்டும் என்பார்.

இந்துமதக்காரர்களிடமும் இது மாதிரி மூட நம்பிக்கை உண்டா? உண்டு! பேய், பிசாசு பற்றிய அவர்களுடைய நம்பிக்கையை ஆராய்ந்து பாருங்கள். அது வெளிப்படும். ஒருவருக்கு உளநோய் ஏற்படுகிறது என்று கொள்வோம். அதனால் பாதிக்கப்பட்ட அவர் திடீரென்று எதிர்பாராத செயல்களில் ஈடுபடுவார்; கூக்குரலிடுவார்; மயக்கமும் அடைவார். உடனே சிலர் அவரிடம் பேய் அல்லது பிசாசு ஆவி அல்லது ஆன்மா குடிபுகுந்து விட்டது என்று கூறி, மந்திரவாதிகளை அழைத்துவந்து அந்த கெட்ட ஆவியை "விரட்டுவார்கள்". செருப்பாலும், துடைப்பக் கட்டையாலும் அடிப்பார்கள்! உடனே அந்தப் பேய், பிசாசுகள் ஓடிவிடுமாம்!

யாராவது தற்கொலை செய்துகொண்டால், அவர் தற்கொலை செய்துகொண்ட இடத்தில் அவர் ஆன்மா பழிவாங்கும் நோக்கத்துடன் சுற்றி அலையும் என்றும் நம்பப்படுகிறது.

சில புராணக் கதைகளைப் படிக்கும் போதும், ஆன்மா பற்றிய சில மூட நம்பிக்கைகள் வெளிப்படும். எடுத்துக்காட்டாக விக்கிரமாதித்தன் கதையைக் கூறலாம். விக்கிரமாதித்தனின் உயிர் அல்லது ஆன்மா "கூடு விட்டு கூடு" பாயுமாம். கூடு என்பது உடலைக் குறிக்கிறது. அதாவது அவன் உயிர் ஒரு உடலிலிருந்து இன்னொரு உடலுக்கு மாறிச் செல்லக்கூடியதாம். யாராவது இறந்தவுடன், அவருடைய உடலில் விக்கிரமாதித்தன் ஆன்மா புகுந்துகொண்டு, அந்த உடலை இயக்கும். வெளிப் பார்வைக்கு அந்த உடல் விக்கிரமாதித்தனாகத் தெரியாது. ஆனால் உண்மையில் அந்த உடலை இயக்குவது விக்கிரமாதித்தன் ஆன்மாவே!

இவையெல்லாம் எந்தக் கருத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளன? ஆன்மா என்பது உடலில் இருந்து பிரிந்து தனியே நிற்கக்கூடிய ஒரு பொருளாகும். அதுதான் உடலுக்கு உயிர்த்தன்மையை அளிக்கிறது. ஒருவரின் செயல்களுக்கு அவரது ஆன்மாவே அடிப்படை! ஒருவர் இறந்த பின்னும் அவர் ஆன்மா மட்டும் இறக்காது, உடலை விட்டு வெளியேறி புறமாக நிற்கும்.

### மூடநம்பிக்கைகளின் தத்துவ வடிவம்

மேற்கண்ட மூடநம்பிக்கைகளின் தத்துவ வடிவமே கருத்து முதல் வாதம் ஆகும். அதை விரிவாக ஆராயலாம்.

ஆன்மா என்ற சொல்லும் மனம், சிந்தனை, தன்னறிவு என்ற சொற்கள் எல்லாம் ஒரே பொருளைத்தான் தத்துவத்தில் குறிக்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**'ஜனதிபதிப் பிசாசு'**

"சஞ்சீவ ரெட்டியின் மனத்தில்
பிசாசு குடி புகுந்துவிட்டது"

—சந்திரசேகர்

எனவே நாம் "மனம்" என்ற சொல்லையே இனி இக்கட்டுரையில் பயன்படுத்தலாம்.

## கருத்து முதல்வாதம் கூறுவதுஎன்ன?

(1) உங்களுடைய மனம், உங்களுடன்— உங்கள் உடலுடன்—இணைந்தது என்றாலும், அது ஒரு வித்தியாசமான, உங்கள் உடலில் இருந்து பிரிந்து நிற்கக்கூடிய ஒரு பொருளாகும்.

(2) உடல் என்பது பருப்பொருள் (material substance) ஆன்மா அல்லது மனம் என்பது ஆன்மப் பொருள் (spiritual substance). உடல் என்ற பருப்பொருளுக்கு எடை, உருவம் போன்ற பண்புகள் உண்டு; மனம் என்ற ஆன்மப் பொருளுக்கு உணர்தல், சிந்தித்தல், விரும்புதல் போன்ற பண்புகள் உண்டு. மனத்தின் பண்புகள், உடல் என்ற பருப்பொருளின் பண்புகளுடன் முற்றிலும் சம்பந்தப்படாதவை;

(3) உங்கள் சிந்தனை, உணர்ச்சி, விருப்பம் போன்றவை உங்கள் உடலில் இருந்து பிரிந்து தனித்து நிற்கக்கூடிய மனத்தின் பண்புகள் ஆகையால், அவற்றிற்கு எந்தவித பருப்பொருள் தன்மை வாய்ந்த அடிப்படை கிடையாது. அதாவது நீங்கள் ஒரு நல்ல திறமையான டாக்டர் என்றால், அதற்குக் காரணம் நீங்கள் படித்த படிப்போ, சூழ்நிலையோ காரணமல்ல. ஏதோ ஒரு மனமே காரணமாகும். அம்மனத்திற்கும் உங்கள் பருப்பொருள் சூழ்நிலைக்கும் சம்பந்தமேகிடையாது.

(4) மனம் தான் உடலுக்கு "உயிர்த் தன்மை" அளிக்கிறது; உடலை இயக்குகிறது; உடல் உறுப்புகளை இயக்கிச் செயல்பட வைக்கிறது. மேலும் மனமானது புலச்செயற்பாடுகளுக்கு (Sensuous activitie) உடல் உறுப்புகளைப் பயன்படுத்துகிறது. ஆனால் "சுத்த" சிந்தனைச் செயல்களுக்கு (intellectual activities) அது உடல் உறுப்புகளைப் பயன் படுத்தாது. அதாவது உங்களுக்கு பருப்பொருள் தன்மை வாய்ந்த தேவைகளை—உணவு, உடை போன்ற தேவைகளை—பூர்த்திசெய்ய மனம் உங்கள் உடல் உறுப்புகளைப் பயன்படுத்துகிறது. ஆனால் புத்தர், மாவீரர் போன்ற முனிவர்கள் "ஆன்மீகத்" தேவைகளைப் பூர்த்தி செய்ய, அவர்களது மனம் உடல் உறுப்புகளைப் பயன்படுத்தவில்லை தானே—மனமே—அத்தேவைகளைப் பூர்த்திசெய்கிறது.

மேற்கூறிய கருத்து முதல் வாதக் கருத்துக்கள் விஞ்ஞானத்தின் உண்மைகளுக்கு முற்றிலும் மாறுபட்டவை; விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புகள் கருத்து முதல்வாதத்தின் "மனம்" பற்றிய கொள்கையை அடியோடு மறுக்கிறது.

## பொருள் முதல்வாதம் கூறுவது என்ன?

பொருள் முதல் வாதம் விஞ்ஞானத்தின் உண்மைகளை அடிப்படையாகக் கொண்டது. அது "மனத்தைப்"பற்றி கீழ்க்கண்ட உண்மைகளைக் கூறுகிறது.

(1) மனம் என்பது உடலைவிட்டுப்பிரிந்து நிற்க முடியாது. மனம் என்பதே பருப்பொருளின் வளர்ச்சியில் ஏற்பட்ட ஒரு வினை பொருளே! பருப்பொருளில் இருந்து மனம் என்பது பிரிந்து தனித்து நிற்கமுடியாது. எனவே நீங்கள் இருந்தால்தான்—உங்கள் உடல் இயங்கிக்கொண்டு இருந்தால்தான்—உங்கள் மனமும் நீடிக்க முடியும். நீங்கள் இல்லையென்றால் உங்கள் மனமும் இல்லை.

(2) மனத்தின் எல்லாச் சிந்தனை நடவடிக்கைகளுக்கும் புலன் உறுப்புகள், சிந்தனை

**சைத்தானும் ஜனபதியும்**

"ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் கடவுளும் சைத்தானும் இருக்கிறார்கள் என்று நான் நமபுகிறேன். மனிதனிடம் கடவுள் தன்மையை உருவாக்க நாம் முயலவேண்டும். 1969-ல் இருந்த நிலையில் சஞ்சீவ ரெட்டி 1977-ல் இருக்கவில்லை என்று நான் கருதினேன். 1979-ல் இந்த நிலை மாறிப் போய்விட்டது.

—வாஜ்பாய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உறுப்புகள் ஆகிய பருப்பொருள் தன்மை வாய்ந்த உடல் உறுப்புகளின் நடவடிக்கைகளே காரணம்! எனவே உங்களுடைய சிந்தனைகளுக்கு மன நடவடிக்கைகளுக்கு—பருப்பொருள் தன்மைவாய்ந்த காரணங்களை அறியமுடியும்.

(3) உடல் இல்லாமல் மனம் நீடிக்க முடியாது என்று பொருள் முதல் வாதம் கூறுகிறதே ஒழிய, மனம் என்பதே இல்லையென்று அது கூறவில்லை என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம். அதே சமயத்தில் பருப்பொருளின் விளைபொருள்தான் மனம் என்பதே ஒழிய, மனத்தின் விளைபொருள் பருப்பொருள் அல்ல என்பதையும் கவனமாக மனதில் கொள்ளவேண்டும்.

மனத்தைப் பற்றிய பொருள் முதல்வாதம், கருத்து முதல் வாதம் இவை இரண்டின் கருத்துக்களில் எது சரியானது என்பதை விஞ்ஞானத்தின் துணைகொண்டு ஆராயலாம்.

## விஞ்ஞானம் கூறுவது என்ன?

உலகில் முதலில் உயிரற்ற பொருள்களே நிலவின. பின் அவற்றில் சில ரசாயன மாற்றங்கள் ஏற்பட்டன. அதன் விளைவாக அடிப்படை உயிர்ப் பொருள் தோன்றியது. பின் அந்த உயிர்ப் பொருளில் ஏற்பட்ட பரிணாம வளர்ச்சியில் உயிரினங்கள் தோன்றின. உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியின் போது அவற்றில் நரம்பு மண்டலமும், பின் மத்திய நரம்பு மண்டலமும், மூளையும் தோன்றின. அப்போதுதான் உயிரினங்கள் உணர்வையும், தன்னறிவையும் (Conscious) பெறத் தொடங்கின. மேற்கொண்டு மனித மூளையின் வளர்ச்சியை யொட்டி, சிந்தனை நிலை வளர்ச்சியடைந்தது. எனவே பருப்பொருளின் வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில்தான், அதன் உயர்ந்த வளர்ச்சியாக மூளையின் தோற்றத்தில் தான், மனம் என்பதே தோன்றியது.

எனவே பருப்பொருளிலிருந்து மனத்தைப் பிரிப்பது என்பது இயலாது.

மனம் என்பதே மூளையின் விளைபொருள். எனவே சிந்தனைச் செயல்பாடு (Mental activity) என்பது மனித மூளையின் செயல்பாடே. சிந்தனைச் செயல் பாட்டை அறிய னித மூளையின் செயல்பாட்டை அறிவது அவசியம்.

மனித மூளையின் செயல்பாடு மத்திய நரம்பு மண்டலத்தின இயக்கத்தைச்சார்ந்தது. எனவே மனித மூளையின் செயல்பாட்டை அறிய, மத்திய நரம்பு மண்டலத்தின் இயக்கத்தை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும்.

## பாவ்லோவின் கண்டுபிடிப்பு

பாவ்லோ (PAVLOV) என்ற சோவியத் விஞ்ஞானி நரம்பு மண்டலத்தின் செயல்களை ஆராய்ந்து, சில புதிய உண்மைகளைக் கண்டுபிடித்தார்.

பாவ்லோவின் கண்டுபிடிப்புக்கு முன்னர், விஞ்ஞானிகள் நரம்பு மண்டலத்தின் வேலையானது உடலுக்குள் பல்வேறு உறுப்புக்களின் செயல்களை ஒன்றிணைத்து, ஒழுங்குபடுத்துவது மட்டும்தான் என்று நினைத்திருந்தனர். அதாவது நமது உடலில் இருதயம், நுரையீரல், இரப்பை சுரப்பிகள்போன்ற பல்வேறு உறுப்புகள் பல்வேறு வேலைகளைச் செய்கிறது அல்லவா! அந்த பல்வேறு வேலைகளை ஒன்றிணைத்து, ஒழுங்குபடுத்தப்பட வேண்டியது அவசியம் அல்லவா! அந்த வேலையைச் செய்வதுதான் மத்திய நரம்பு மண்டலத்தின் வேலை என்று நினைக்கப்பட்டது.

ஆனல் பாவ்லோவ் நரம்பு மண்டலத்தின் மற்ருெரு முக்கிய வேலையைக்கண்டுபிடித்தார். ஒரு உயிரினத்தின் நரம்பு மண்டலமானது, அந்த உயிரினத்தின் உடலுக்குள் உள்ள உறுப்புகளின் வேலையை ஒழுங்குபடுத்துவதோடு அல்லாமல், அந்த மொத்த உயிரினத்திற்கும் அது வாழ்கின்ற புறயுலகத்திற்கும் இடையில் உறவுகளை ஏற்படுத்தி ஒழுங்குபடுத்துகிறது. அவ்வாறு அந்த மொத்த உயிரினத்திற்கும் புறயுலகத்திற்கும் இடையில் உறவுகள் உருவாக்கப்பட்டு, ஒழுங்கு படுத்தப்படுவதால்தான், அந்த உயிரினம் புறயுலகில் வாழ முடிகிறது; தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

அதாவது நரம்பு மண்டலமானது உங்களுக்கும் நீங்கள் வாழ்கின்ற புறயுலகிற்கும் இடையில் உறவுகளை உருவாக்கி, ஒழுங்குபடுத்துகிறது. அதனுல்தான்—அவ்வாறு உறவுகள் ஏற்படுவதால்தான்—உங்களால் புறயுலகில் செயல்பட்டு, வாழ முடிகிறது.

## நரம்பு மண்டலம் எவ்வாறு உறவுகளை ஏற்படுத்துகின்றன?

உங்கள் காலில் ஒரு எறும்பு கடிக்கிறது என்று கொள்வோம். உடனே உங்கள் கை அந்த எறும்பு இருக்கும் இடத்திற்கு செல்கிறது; எறும்பை அகற்றுகிறது, உங்களுக்கு

www.tamilarangam.net



வெளிப்பார்வையில் இது ஒரு எளிமையான, சிறு நடவடிக்கையாக இருக்கலாம். ஆனால் எவ்வாறு உங்களுக்கு அந்த எறும்பை அகற்ற கை செல்கிறது என்பதை ஆராய்ந்து பாருங்கள்! அப்போது அந்த நடவடிக்கையின் சிக்கலான தன்மை வெளிப்படும்.

எறும்பு உங்கள் காலைக் கடிக்கும்போது, அந்த கடிபடும் உணர்ச்சி, கடிபட்ட இடத்தில் உள்ள நரம்புகளால் உங்கள் மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. உடனே மூளை கைகளுக்கு எறும்பை அகற்றும்படி கட்டளை இடுகிறது. மூளை தான் பெறுகின்ற ஒவ்வொரு தூண்டுதலுக்கும்ஒவ்வொரு பதிலை (Response) அளிக்கிறது.

எறும்புடன் உங்களுக்கு உள்ள உறவைத் தீர்மானித்து, அதன் மீது நீங்கள் செயல்பட வைப்பது எது? உங்கள் மூளை!

இவ்வாறு புறயுலகம் உங்கள் உடலில் ஏற்படுத்துகின்ற ஒவ்வொரு தூண்டுதலுக்கும் உங்கள் உடல் மூளையின் உதவியால் ஒவ்வொரு பதிலைத்தருகிறது. இதைத்தான் நாம் புறயுலகுடன் உறவுகளை ஏற்படுத்திக்கொள்ளுதல் என்று கூறுகிறோம். இவ்வாறு புறயுலகின் ஒவ்வொரு தூண்டுதலுக்கும் ஒவ்வொரு பதில் என்ற அடிப்படையில் நீங்கள் புறயுலகத்துடன் உறவு ஏற்படுத்திக்கொள்கிறீர்கள் அதனால் உங்களால் உங்கள் புறயுலகின் மீது செயல்பட்டு, உங்கள் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

உங்களுக்கும் புறயுலகிற்கும் இடையில் உள்ள உறவுகள் எவ்வாறு தோன்றி வளர்கின்றன?

சில உறவுகளை மனிதன் தனது பரிணாம வளர்ச்சியின் போதே பெற்று விட்டான். அதாவது மனிதன் தான் பரிணாம வளர்ச்சி பெற்ற பிறகு புறயுலகில் செயல்பட்டு அந்த உறவுகளை ஏற்படுத்த வில்லை. இப்படிப்பட்ட உறவுகளை "அனிச்சைச்செயலை" (Unconditional reflex) அடிப்படையாகக் கொண்ட உறவுகள் எனக் கூறலாம்.

அனிச்சைச் செயல் என்றால் என்ன? தூசி கண்ணில் விழும்போது, உடனே கண் இமைகள் மூடிக்கொள்கிறதே அதுதான் அனிச்சைச் செயல். எறும்பு கடித்தவுடன், கைகள் எறும்பு கடிக்கிற இடத்திற்குச் செல்கிறதே அதுதான் அனிச்சைச் செயல். அதாவது புறயுலகப் பொருட்கள், நிகழ்ச்சிகளால் தூண்டப்பட்ட வுடனே, தானாகவே உறுப்புக்கள் இயங்குவதைத் தான் அனிச்சைச் செயல் என்கிறோம்.

சிலஉறவுகளை நீங்கள் உங்கள் சொந்தவாழ்க்கையின் போது ஏற்படுத்திக்கொள்கிறீர்கள். எடுத்துக் காட்டாக நீங்கள் ஒரு பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக வேலை பார்க்கிறீர்கள் என்று கொள்வோம். ஒரு குறிப்பிட்ட நேரத்தில் பள்ளியில் மணி அடித்தவுடன், நீங்கள் வேலையைத் தொடங்குகிறீர்கள்.

இதை "இச்சைச் செயல்" (Conditional reflex) என்று அழைக்கலாம். உங்களுக்கும் மணிச்சத்தத்திற்கும் இடையில் ஒரு உறவை நீங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ளீர்கள். இது உங்கள் வாழ்வில் நீங்களே ஏற்படுத்திக் கொண்டது. இந்த உறவு மனித இனம் எல்லாவற்றிற்கும் பொதுவல்ல. அதாவது பள்ளி மணி அடித்தவுடன் வேலைசெய்யத் தொடங்க வேண்டும் என்பது பள்ளியில் வேலை பார்க்காதவர்களுக்குத் தேவையில்லை. அது உங்கள் சம்பந்தப்பட்ட உறவு.

---

## பாவ மன்னிப்பு

"சரண்சிங் ஒரு நாடோடி. உ.பி. அரசியலில் இருந்த சரண்சிங்கை டில்லிக்கு வரச்செய்ததன் மூலம் நான் 'பெரிய தவறு' செய்து விட்டேன். இதற்காக நான் மக்களிடம் மன்னிப்பு கோருகிறேன்."

—பிலு மோடி

தினமணி 24-8-79

---

## சதி

"ஜெகஜீவன்ராம் பிரதமராகி விடாதபடி தடுக்க இந்திராவுக்கும் ராஷ்டிரபதி சஞ்சிவ ரெட்டிக்கும் இடையே 'சதி' நடந்தது."

—சந்திரசேகர்,

தினமணி 24-8-79

—2

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## 'ஞானோதயம்'

"1975-ம் ஆண்டிலிருந்து மிகுந்த தொல்லைக்கு உட்படுத்தப்பட்ட ஜன நாயக ஆட்சி முறையில்பொதுமக்கள் வேகமாக நம்பிக்கையை இழந்து விடுகிறார்கள். ஜனநாயக ஆட்சி முறையில் அவர்களுக்கு நம்பிக்கை இருக்குமாறு செய்வது புதிய அரசின் முதல் பணியாக இருக்கும்."

—சரண்சிங்.

தினமணி 19-8-79

---

இச்சைச் செயலை அடிப்படையாகக் கொண்ட இந்த உறவு தற்காலிகமானது. உங்கள் பள்ளியில் மணியடிப்பதற்குப்பதிலாக சங்கு ஊதுகிறார்கள் என்று கொள்வோம். அப்போது நீங்கள் மணிச் சத்தத்துடன் ஏற் படுத்திய உறவைக் கைவிட்டு விட்டு சங்குச் சத்தத்துடன் உறவை ஏற்படுத்திக் கொள்வீர்கள்.

இவ்வாறு மேற்கண்ட இரு செயல்களின் அடிப்படையில் அமைந்த உறவுகளை நீங்கள் புறயுலகத்துடன் ஏற்படுத்திக்கொள்கிறீர்கள். அவை மூலம்தான் நீங்கள் புறயுலகில் செயல் பட முடிகிறது.

## இரு செயல்களுக்கும் அடிப்படை

மேற்கண்ட இரு செயல்களுக்கும் அடிப் படை மூளையில் (Brain) தான் இருக்கிறது. மூளையில் உணர்வு மையம் (Sensory Centre) இயக்கு மையம் (Motor centre) என்ற இரண்டு மையங்கள் உள்ளன. உணர்வு மையம் என்பது வெளியுலகச் செய்திகளை—தூண்டுதல்களை— நரம்புகள் மூலமாகப் பெறுகின்றது. இயக்கு மையம் என்பது அந்தச் செய்திகளுக்குத் தகுந்த பதில்களை (Response) அனுப்புகிறது.

உங்கள் காலில் எறும்பு கடித்தவுடன், அந்த கடி உணர்வு—தூண்டுதல்—நரம்புகள் வழியாக மூளையின் உணர்வு மையத்தை அடைகிறது. உணர்வு மையம் அந்தச் செய் தியை உடனே இயக்கு மையத்திற்கு அனுப்பி வைக்கிறது. செய்தியைப் பெற்றவுடன், இயக்கு மையம் தகுந்த பதிலை—கைகளை எறும்பு கடித்த இடத்திற்குச் செல்லும்படி கட்டளையை—அனுப்புகிறது. உடனே உங்கள் கைகள் கட்டளையை ஏற்று, எறும்பு இருக்கிற இடத்தை நோக்கிச் செல்கிறது.

மூளையில் உணர்வு மையத்தில் இருந்து தான் பெறுகின்ற ஒவ்வொரு குறிப்பிட்ட செய் திக்கும்—தூண்டுதலுக்கும் இயக்கு மையம் ஒவ்வொரு குறிப்பிட்ட பதிலை அனுப்பி உறுப்பு களை இயங்கச்செய்கிறது. அதாவது ஒவ்வொரு குறிப்பிட்ட தூண்டுதலுக்கும் மூளையில் உள்ள உணர்வு மையம், இயக்கு மையம் இரண்டுக் குள் ஒரு உறவு ஏற்படுகிறது. இந்த உறவு தான், உங்களுக்கும் புறயுலகிற்கும் இடையில் ஏற்படுகின்ற உறவின் அடிப்படையாகும்.

சில குறிப்பிட்ட தூண்டுதல் சம்பந்தப் பட்ட மட்டில், உங்கள் மூளையில் உள்ள உணர்வு மையம், இயக்கு மையம் இரண்டுக் கும் இடையில் உள்ள உறவுகள் உங்களது சொந்த வாழ்வின்போது ஏற்பட்டவை அல்ல. அவை மனிதனின் பரிணும வளர்ச்சியின் போதே ஏற்படுத்தப்பட்டு விடுகின்றன. உதா ரணமாக தூசி உங்கள் கண்ணில் ஏற்படுத்து கின்ற தூண்டுதல் சம்பந்தப்பட்ட மட்டில், உங்கள் மூளையின் மையங்களுக்கு இடையே உள்ள உறவுகள் மனிதப்பரிணும வளர்ச்சியின் போதே ஏற்படுத்தப்பட்ட உறவாகும். எனவே தான் பிறந்த குழந்தைகள் கூட கண்ணில் தூசி பட்டவுடன் கண்களை மூடிக்கொள்கிறது. குழந்தையென்றாலும் சரிதான், கிழவன் என்று லும் சரிதான், தூசியின் தூண்டுதலுக்கு, மூளை ஒரே மாதிரியான பதிலைத் தரும். அதாவது கண்களை உடனே மூடச் செய்யும். இப்படிப் பட்ட உறவுகளை அடிப்படையாகக் கொண்ட செயல்களைத்தான் முன்னால் "அனிச்சைச் செயல்" என்று கண்டோம்.

வேறு சில தூண்டுதல்களுக்கு உங்கள் மூளையில் மையங்களுக்கு இடையில் உள்ள உறவுகள், நீங்களே உங்கள் வாழ்க்கையின் போது உருவாக்கியவைதான். உதாரணமாக முன்பு பள்ளி ஆசிரியர் தனக்கும் மணிக்கும் ஏற்படுத்திய உறவைக் கண்டோமே! மணிச் சத்தம் அளிக்கிற தூண்டுதல், உணர்வுமையத் தின் வழியாக இயக்கு மையத்தை அடைந்த வுடன், இயக்கு மையம் வேலை செய்யத் தொடங்குங்கள் என்று கட்டளையை அனுப்பு கிறதே அது நீங்களே உங்கள் வாழ்வில் ஏற் படுத்திக் கொண்ட உறவின் அடிப்படையில் தான் நடக்கிறது. அதாவது மணிச் சத்தம் அளிக்கிற தூண்டுதல் பொறுத்த மட்டில் உங்கள் மூளையில் இரண்டு மையங்களுக்கும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இடையில் ஏற்பட்டுள்ள உறவு, உங்கள் சொந்த வாழ்வின் போது மூளையில் ஏற்பட்டது தான். இப்படிப்பட்ட உறவுகளின் அடிப்படையில் நடக்கிற செயல்களைத்தான் "இச்சைச் செயல்" என்று நாம் முன்பு கண்டோம்.

இவ்வாறு உயிரினங்களின் மூளையில் உள்ள இரண்டு மையங்களுக்கும் இடையில் உள்ள உறவுகள் இரண்டு வகைப்பட்டன ஒன்று உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியின் யின் போதே ஏற்பட்டவை; அவை நிரந்தர மானவை; அந்த உறவுகளின் அடிப்படையில் நடைபெறுகின்ற செயல்கள் "அனிச்சைச் செயல்"எனப்படும். மற்றொன்று உயிரினங்கள் தங்கள் சொந்த வாழ்வின்போது ஏற்படுத்திக் கொண்ட உறவுகளாகும், அவை தற்காலிக மானவை; அந்த உறவுகளின் அடிப்படையில் நடைபெறுகின்ற செயல்கள் 'இச்சைச்செயல்' எனப்படும்.

எனவே எல்லா உயிரினங்களும் தங்களுடைய மத்திய நரம்பு மண்டலம், மூளை ஆகிய வற்றின் உதவி கொண்டுதான், தாங்கள் வாழ்கின்ற புறயுலகுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்கின்றன.

பாவ்லோவ் கூறியபடி, நரம்பு மண்டல மானது ஒரு உயிரினத்தின் உடலுக்குள் உள்ள உறுப்புக்களின் வேலைகளை ஒன்றிணைத்து, ஒழுங்குபடுத்துவதோடு மட்டும் அல்லாமல், அந்த மொத்த உயிரினத்திற்கும் அதன் புற யுலகிற்கும் இடையில் உறவுகளை ஏற்படுத்தி, ஒழுங்கமைக்கிறது. அவ்வாறு உறவுகள் ஏற் படுவதுமூலமாகத்தான், உயிரினங்கள் புறயுல கில் செயல்பட்டு, தங்களுடைய தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகிறது.

நரம்பு மண்டலத்தின் மேற்கூறிய இயக் கங்கள்தான் உயிரினத்தின் மனத்தின் தோற் றம் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைகிறது. இதனை அடுத்த கட்டுரையில் காணலாம்.

(தொடரும்)

---

# 'தாயைக் காத்த தனயன்' ஆட்சியில்...

கோவை
22-8-79

அன்புடன் அன்னைக்கு,

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ... ... ... ... ... ... ... ...

எங்களை எல்லாம் எங்களை பெற்ற தாய் தந்தையரே கூட பார்க்க அனுமதிக்க மாட்டார்களாம். தமிழ் நாட்டு அரசியலில் நாகரீகம் அவ்வளவு ஆரோக்கியமாக வளர்ந்துள்ளது. சமீபத்தில் தோழர் கோபாலின் உறவினர்கள் தர்மபுரியிலிருந்தும், தோழர் தியாகுவின் சகோதரர் திருப்பூரி லிருந்தும் வந்திருந்தனர். ஆனல் அரசின் புதிய உத்தரவுபடி அவர்களை சந்தித்த பேச அனுமதிக்க முடியாது என சிறை அதிகாரிகள் கூறிவிட்டனர். போகிற போக்கைப் பார்த்தால் பெற்றவர்களிடம் எங்களை எல்லாம் திருப்பி அனுப்புவார்களோ என்னவோ! சமீபத்தில் எங்களை பற்றிய செய்திகளை எல்லாம் பத்திரிகையில் பார்த்திருக்கலாம் என எண்ணுகிறேன்.

புரட்சியாளர்கள் என்ற முறையில் நாங்களும் எங்கள் மனத்தை பக்குவப்படுத்திக் கொண்டோம். புரட்சியாளர்களின் தாய் என்ற முறையில் நீங்களும் பக்குவப்படுத்திக் கொள்வதே நலம்.

... ... ... ... ... ... ...

... ... ... ... ... ... ...

செல்வன்
க. வள்ளுவன்

(மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு இயக்கத்தோழர் கலியபெருமாள் அவர்களின் மகன் க. வள்ளுவன் கோவைச் சிறையிலிருந்து தன் தாய்க்கு எழுதிய கடிதத் திலிருந்து ஒரு பகுதி தரப்பட்டுள்ளது.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தலைமையின் வழிமுறை பற்றிய சில பிரச்சனைகள்

**மா-சே-துங்**

*ஜூன் 1, 1943*

1. கம்யூனிஸ்ட்களாகிய நாம், எந்த வேலையைச் செய்தாலும் அதில் கையாள்வதற்கு இரண்டு முறைகள் உள்ளன. ஒன்று பொதுவானதைக் குறிப்பிட்ட ஒன்றோடு பொருத்துவதாகும்; மற்றொன்று தலைமையை மக்களோடு இணைப்பதாகும்.

2. எந்தப் பணியிலும், பொதுவான, பரவலான அறை கூவலை விடப்படா விட்டால், பரந்துபட்ட மக்களை செயலுக்கு ஒன்று திரட்ட முடியாது. ஆனால் தலைமை இடத்தில் உள்ள நபர்கள் ஒரு பொதுவான அறை கூவலுடன் மட்டும் தங்களைக் குறுக்கிக் கொண்டால்—அவர்கள் தாங்களே நேரடியாக, சில அமைப்புகளில், அறை கூவல் விடப்பட்ட பணியில் ஆழமாகவும், குறிப்பாகவும் சென்று, சில குறிப்பிட்ட புள்ளியில் ஒரு சாதனையை ஏற்படுத்தி, அனுபவத்தைப் பெற்று, அந்த அனுபவத்தைப் பிற குழுக்களை வழி நடத்துவதற்குப் பயன் படுத்தாவிட்டால்—அப்போது அவர்களால் தங்களுடையபொதுவான அறை கூவலின் சரியான தன்மையைச் சோதிக்கவோ அல்லது அதன் உள்ளடக்கத்தை வளர்த்தெடுக்கவோ அவர்களுக்கு வேறு வழியில்லை; அதிலிருந்து ஒன்றும் கிடைக்காமல் போகக் கூடிய அபாயம் உள்ளது. 1942-ம் ஆண்டு சீர் செய் இயக்கத்தில் (Rectification movement) எடுத்துக் காட்டாக, பொதுவான அறை கூவலை குறிப்பானதுடன் இணைக்கும் வழிமுறையும் குறிப்பான வழிகாட்டுதலும் பயன் படுத்தப்பட்ட இடங்களில் சாதனைகள் ஏற்பட்டன; இந்த வழிமுறை பயன்படுத்தப்படாத இடங்களில் சாதனைகளே இல்லை. 1943-ம் ஆண்டு சீர் செய் இயக்கத்தில், மத்தியக் கமிட்டியின் ஒவ்வொரு பிரிவும், துணைப்பிரிவும், ஒவ்வொரு பிரதேசத்தின் கட்சிக் குழுவும் கட்சிச் செயல் குழுவும் ஒரு பொதுவான அறை கூவலைவிட்டதுடன் (ஆண்டு முழுமைக்குமான ஒரு சீர் செய் இயக்கத்திட்டம்) செயல் இயக்கத்தில் அனுபவங்களைப் பெற்றுக் கொண்டு, கீழ்க் கண்டவைகளைச் செய்யவேண்டும். அமைப்புக்குள் இருந்தும், மற்றும் அருகிலுள்ள பிற அமைப்புகள் பள்ளிகள் அல்லது ராணுவக் குழுக்கள் ஆகியவற்றில் இருந்தும் இரண்டு அல்லது மூன்று குழுக்களை (மிகப் பலக் குழுக்கள் கூடாது) தேர்ந்தெடுங்கள். அந்தக் குழுக்களைப் பற்றி ஒரு முழுமையான ஆய்வை நடத்துங்கள்; அவைகளில் சீர் செய் இயக்கத்தின் வளர்ச்சி பற்றிய ஒரு விரிவான அறிவையும் அவைகளில் உள்ளவர்களின் சில பிரதிநிதிகளுடைய (அநேக பேர் அல்ல) அரசியல் வரலாறு, தத்துவார்த்த அறிவு, ஆய்வில் உள்ள ஆர்வம், வேலையில் அவர்களுடைய பலமான, பலவீனமான அம்சங்கள் ஆகியவற்றைப் பற்றி ஒரு விரிவான அறிவையும் பெறுங்கள். மேலும் அந்தக் குழுக்கள் எதிர் நோக்குகின்ற நடைமுறைப் பிரச்சனைகளுக்கு குறிப்பான தீர்வுகள் காண்பதற்கு அவற்றின் பொறுப்பில் உள்ளவர்களுக்கு தனிபட்ட நேரடி வழிகாட்டுதலை (Personal guidance) அளிக்கவும். ஒவ்வொரு அமைப்பும் பள்ளியும் அல்லது ராணுவ குழுவும் ஏராளமான கீழ்மட்டக் குழுக்களைப் பெற்றிருப்பதால், அவற்றின் தலைவர்கள் அதே போல் செய்ய வேண்டும். மேலும் இந்த வழிமுறையைக் கொண்டு தான் தலைவர்கள் தலைமை தாங்குதல், கற்றுக் கொள்ளுதல் ஆகிய இரண்டையும் ஒன்றிணைக்கிறார்கள். தலைமை இடத்தில் உள்ள எவரும், குறிப்பிட்ட நபர்களிடம் இருந்தும் குறிப்பிட்ட கீழ் மட்டக் குழுக்களின் நிகழ்ச்சிகளில் இருந்தும் குறிப்பான அனுபவங்களை பெறாமல் இருந்தால் அவருக்கு எல்லாக் குழுக்களுக்கும் பொதுவான வழிகாட்டுதலை அளிப்பதற்குத் தகுதியில்லை. எல்லா மட்டங்களிலும் உள்ள முன்னணி ஊழியர்கள் செயல்படுத்தப் பழகும் வகையில் இந்த வழி முறை எல்லா இடங்களிலும் வளர்க்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ரகசியம்...பரம ரகசியம்

“ஆறு அம்சத்திட்ட அடிப்படையில் கூட்டணி அரசில் அ. இ. அ. தி. மு.க. பங்குகொண்டுள்ளது. குறைந்த பட்ச விவரங்கள் கொண்ட தஸ்தாவேஜு ஒரு ரகசிய தஸ்தாவேஜு. அதில் உள்ள விவரங்கள் பிரதமர் சரண்சிங், தமிழக முதல்வர் எம். ஜி. ஆர். ஆகியோருக்கு மட்டுமே தெரியும்.”

—பாலா பழனூர்
தினமணி 20-8-79

---

3. இயக்கத்தின் போது மிகக்குறைந்த எண்ணிக்கையில் செயல்வீரர்களையும், குறிப்பிட்ட குழுக்களின் தலைவர்களையும் கொண்ட ஒன்றை மையமாகக் கொண்ட ஒரு தலைமைக் குழு உருவாக்கப் படுதலும், இந்தத் தலைமைக் குழு தன்னை இந்த இயக்கத்தில் பங்கெடுக்கின்ற பரந்துபட்ட மக்களிடையே நெருக்கமாகப் பிணைத்துக் கொள்வதும் சீர் செய் இயக்கத்தின் வெற்றிக்கு அவசியமானது என்பதை 1942-ம் ஆண்டு சீர் செய்யும் இயக்கமும் நிரூபிக்கிறது. தலைமைக் குழு எவ்வளவுதான் தீவிரமாக இருந்தாலும், அதனுடைய நடவடிக்கை பரந்துபட்ட மக்களின் நடவடிக்கையுடன் ஒன்றிணைக்கப் படவில்லையென்றால் அந்த நடவடிக்கை ஒரு சில குறிப்பிட்ட நபர்களின் பயனற்ற முயற்சியாகவே அமையும். அதே சமயத்தில், பரந்துபட்ட மக்களின் நடவடிக்கையை முறையாக ஒன்று திரட்ட ஒரு சக்தி வாய்ந்த தலைமைக்குழு இல்லையென்றால், அந்த நடவடிக்கை நீண்ட காலத்திற்கு நீடிக்கப் படவோ அல்லது சரியான திசையில் முன் கொண்டு செல்லப்படவோ அல்லது ஒரு உயர்ந்த நிலைக்கு உயர்த்தப்படவோ முடியாது. எந்த இடத்திலும் மக்கள் பொதுவாக ஒப்பு நோக்குகையில் தீவிரமானது, இடைப்பட்டது, பின் தங்கியது என்ற மூன்று பிரிவுகளை உடையதாக இருக்கின்றனர். எனவே குறைவான எண்ணிக்கையில் உள்ள தீவிரமுள்ள நபர்களை தலைமையைச் சுற்றி ஒன்று படுத்துவதில் திறமையுள்ளவர்களாக தலைவர்கள் இருக்க வேண்டும்; இடைப்பட்ட நபர்களின் நிலையை உயர்த்தவும், பின் தங்கிய நபர்களை வென்றெடுக்கவும் தலைவர்கள் அவர்களைச் சார்ந்திருக்க வேண்டும். பரந்துபட்ட மக்களுடன் உண்மையிலேயே ஒன்றுபட்ட, உறவுகொண்ட ஒரு தலைமைக் குழு பரந்துபட்ட மக்கள் போராட்டத்தின் இயக்கத்தில்தான் படிப்படியாக உருவாக முடியுமே ஒழிய, அதிலிருந்து தனிமைப்பட்டு உருவாக முடியாது. ஒரு பெரிய போராட்டத்தின் இயக்கத்தில் அனேகவற்றில் தலைமைக் குழுவின் அமைப்பு, முதல், இடை, கடைக்கால கட்டங்கள் முழுவதும் மொத்தத்தில் மாறாமல் அப்படியே இருக்கக் கூடாது; இருக்க முடியாது; ஒப்பு நோக்குகையில் தாழ்ந்த அல்லது பின் நோக்கிச் சென்றிருக்கிற தலைமைக் குழுவில் ஏற்கனவே இருக்கிற நபர்களை அகற்றுவதற்கு போராட்டத்தின் போது முன் வருகின்ற தீவிர செயல் வீரர்கள் தொடர்ந்து பதவி உயர்த்தப்பட வேண்டும். அநேக இடங்களில் அநேக அமைப்புகளில் வேலைகள் முன் நோக்கி தள்ளப்படாமல் இருப்பதற்கு ஒரு அடிப்படைக் காரணம் பரந்துபட்ட மக்களுடன் ஒன்று பட்டதும் உறவு கொண்டதும் தொடர்ந்து நன் முறையில் தன்னை வைத்துக் கொள்ளக் கூடியதுமான ஒரு தலைமைக்குழு இல்லாததேயாகும். உண்மையான நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்பட்ட (செயற்கையாக மொத்தத்தில் தூக்கியெறியாமல்) மிகத் தீவிரமான, நேர்மையான, கவனம்மிக்க ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் மாணவர்களை உள்ளடக்கியதான பல நபர்களை அல்லது ஒரு டஜன் அல்லது கொஞ்சம் அதிகமான நபர்களைக் கொண்ட ஒரு தலைமைக் குழுவைப் பெற்று இருக்கவில்லையென்றால் நூறு பேர்களைக் கொண்ட பள்ளிக்கூடம் நன்கு இயங்கமுடியாது. ஒவ்வொரு அமைப்பிலும், பள்ளியிலும்; படைப் பிரிவிலும், ஆலையிலும், அல்லது கிராமத்திலும், கட்சியை போல்ஷிவிக் மயமாக்குவதற்கான ஸ்டாலினின் பன்னிரெண்டு நிபந்தனைகளில் ஒன்பதாவது நிபந்தனையை அதாவது, தலைமையின் ஒரு மையத்தை நிறுவுவதை நிறைவேற்ற வேண்டும். டிமிட்ரோவ் முன்னணி ஊழியர் கொள்கைபற்றிய தனது விவாதத்தில் குறிப்பிட்டுள்ள நான்கு அளவுகோல்களே—லட்சியத்திற்கு பரிபூரணமான அர்ப்பணிப்பு, மக்களுடன் தொடர்பு, ஒன்றின் திசையை தானே தனித்து அறியும் திறமை, கட்டுப்பாட்டை கடைபிடித்தல்—மேற்கூறப்பட்ட ஒரு தலைமைக் குழுவிற்கு உரிய அளவுகோல்களாகும். பிரதானப் பணிகளை—யுத்தம், உற்பத்தி, கல்வி (சீர்செய்து கொள்ளுதல்உட்பட) ஆகியவற்றை—செயல்படுத்துவதிலும் சரி அல்லது வேலைகளை சரிபார்ப்பது, ஊழியர்களின் வரலாற்றை ஆராய்வது அல்லது பிற நடவடிக்கைகளிலும் சரி, பொதுவான அறைகூவலை குறிப்பிட்ட வழிகாட்டுதலுடன் இணைக்கும் வழிமுறையோடு, தலைமைக் குழுவை பரந்துபட்ட மக்களுடன் தொடர்பு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



படுத்தும் வழிமுறையையும் மேற்கொள்வது அவசியமானதாகும்.

4. நம்முடைய கட்சியின் எல்லா நடைமுறை வேலைகளிலும், எல்லாச் சரியான தலைமையும் அவசியமாக "மக்களிடமிருந்து, மக்களுக்காக" அமைய வேண்டும். இதன் பொருள் என்னவென்றால்: மக்களின் கருத்துக்களை (சிதறியும் முறையற்றும் கிடக்கிற கருத்துக்கள்) எடுத்துக் கொள்ளவும், அவற்றில் கவனத்தை மையப்படுத்தவும் (ஆய்வின் மூலம் அவற்றை மையப்படுத்தப்பட்ட, முறையுள்ள கருத்துக்களாக மாற்றி அமைக்கவும்) அதன்பின் மக்களிடம் சென்று, அந்த கருத்துக்களை அவர்கள் தங்கள் சொந்தக் கருத்துக்களாகத் தழுவிக்கொண்டு, அவற்றுடன் தங்களை உறுதியாகப் பிணைத்து, அவற்றைச் செயலில் நடைமுறை படுத்தும் வரை அந்தக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யவும், தெளிவுபடுத்தவும், அப்படிப்பட்ட நடவடிக்கைகளின் போது அந்த கருத்துக்களின் சரியான தன்மையைச் சோதிக்கவும் வேண்டும் என்பதேயாகும்.

அந்தக் கருத்துக்கள் பாதுகாக்கப்படவும், செயல்படுத்தப்படவும் செய்யும் வகையில், மறுபடியும் மக்களிடமிருந்து வருகிற கருத்துக்களில் கவனத்தை மையப்படுத்தவும், மறுபடியும் மக்களிடம் செல்லவும் வேண்டும். ஒரு முடிவற்ற சுருள் வட்ட அடிப்படையில் மேலும் மேலும் அவ்வாறு செய்ய செய்ய, அந்தக் கருத்துக்கள் ஒவ்வொரு தடவையும் மிகவும் சரியானதாகவும் மிகவும் அவசியமானதாகவும் வளர்ச்சியுடையதாகவும் மாறுகிறது. இது தான் அறிவைப்பற்றிய மார்க்சிய தத்துவமாகும்.

5. ஒரு அமைப்பில் அல்லது ஒரு போராட்டத்தில் தலைமைக் குழுவிற்கும் பரந்துபட்ட மக்களுக்கும் இடையிலான ஒரு சரியான உறவு பற்றிய கருத்து, தலைமையைப் பொறுத்த மட்டில் சரியான கருத்துக்கள் என்பது "மக்களிடமிருந்து, மக்களுக்கு" என்பதிலிருந்தே வரமுடியும் என்ற கருத்து, தலைமையின் கருத்துக்கள் நடைமுறையில் செயல்படுத்தப்படும் போது பொதுவான அறைகூவலானது குறிப்பிட்ட வழிகாட்டுதலுடன் இணைக்கப்படவேண்டும் என்ற கருத்து ஆகிய மேற்கண்ட கருத்துக்கள், இவை சம்பந்தப்பட்ட வினாக்களில் நம்முடைய ஊழியர்கள் மத்தியில் நிலவுகின்ற தவறுகளைத் திருத்துவதற்காக தற்போதைய சீர்செய் இயக்கத்தின் போது எல்லா இடங்களிலும் பரப்பப்பட வேண்டும். அநேக தோழர்கள் செயல் வீரர்களை ஒன்றிணைத்து ஒரு தலைமை மையத்தை உருவாக்குவதின் முக்கியத்துவத்தைப் பார்க்கவில்லை, அல்லது அதனை செயல்படுத்துவதில் நன்றாகயில்லை; அவர்கள் இந்தத் தலைமை மையத்தை பரந்துபட்ட மக்களுடன் தொடர்பு படுத்துவதின் முக்கியத்துவத்தைப் பார்க்கவில்லை, அல்லது அதனை செயல்படுத்துவதில் நன்றாகயில்லை; எனவே அவர்களுடைய தலைமை அதிகார வர்க்கத் தன்மையுடையதாகவும், பரந்துபட்ட மக்களிடமிருந்து துண்டிக்கப்பட்டதாகவும் மாறுகிறது. அநேக தோழர்கள் பரந்துபட்ட மக்கள் போராட்டத்தின் அனுபவங்களைத் தொகுப்பதின் முக்கியத்துவத்தைப் பார்க்கவில்லை, அல்லது அதனைச் செயல்படுத்துவதில் நன்றாகயில்லை; ஆனால் தங்களை அறிவாளிகளாகக் கற்பனை செய்து கொண்டு, தங்களுடைய அகநிலைக் கருத்துக்களை ஒலிப்பதிலேயே விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள்; அதனால் அவர்களுடைய கருத்துக்கள் ஒன்றுமில்லாததாகவும், நடைமுறைச் சாத்தியம் அற்றதாகவும் இருக்கிறது. அநேக தோழர்கள் ஒரு பணியைப் பொறுத்த மட்டில் பொதுவான அறைகூவலை விடுவதுடன் திருப்தி அடைந்து கொள்கிறார்கள்; அவர்கள் அதனை உடனடியாக குறிப்பிட்ட, ஸ்தூலமான வழிகாட்டுதலுடன் பின்பற்றுவதின் முக்கியத்துவத்தைப் பார்க்கவில்லை, அல்லது அதனைச் செயல்படுத்துவதில் சரியில்லை; எனவே அவர்களுடைய அறைகூவல் அவர்களுடைய உதடுகளில், அல்லது பேப்பர்களில் அல்லது மகாநாட்டு அறையில்தான் நீடிக்கிறது; அவர்களுடைய தலைமை அதிகார வர்க்கத் தன்மையுடையதாக மாறுகிறது. தற்போதைய சீர்செய் இயக்கத்தில் இந்தக் குறைபாடுகளை நாம் சரிசெய்யவேண்டும்; நம்முடைய ஆய்வில், பணியைப் பற்றிய சோதனையில், ஊழியர்களின் வரலாற்றை ஆராய்வதில் நாம் தலைமையை பரந்துபட்ட மக்களுடன் ஒன்றிணைக்கிற, பொதுவானதை குறிப்பிட்டதுடன் ஒன்றிணைக்கிற வழிமுறைகளைப் பயன்படுத்த அறிய வேண்டும்; மேலும் நாம் இந்த வழிமுறைகளை நம்முடைய எல்லா எதிர்காலப் பணிகளில் செயல்படுத்த வேண்டும்.

(அடுத்த இதழில் முடியும்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்சிய பொருளாதாரம்

# முதலாளித்துவ நெருக்கடிகள்

முதலாளித்துவ சமுதாயம் என்பது மனித சமுதாய வளர்ச்சியில் ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் தோன்றி நிலவுகிற ஒரு சமுதாய மாகும். அச்சமுதாயம் தனக்கு முந்தைய நிலவுடமைச் சமுதாயத்தைத் தகர்த்தெறிந்து விட்டு தான் தோன்றியது.

நிலவுடமைச் சமுதாயத்தை அகற்றி விட்டு, தான் தோன்றி வளர்கின்ற தொடக்க காலகட்டத்தில் முதலாளித்துவ சமுதாயம் சமுதாய வளர்ச்சியில் ஒரு முற்போக்கான பாத்திரத்தை வகிக்கிறது. பின் அது மேலும் மேலும் வளர, அதில் முரண்பாடுகள் தோன்றுகின்றன; அதன் விளைவாக சமுதாயத்தில் நெருக்கடிகள் ஏற்படுகின்றன. ஒரு குறிப் பிட்ட வளர்ச்சி கட்டத்தில் அதுசமுதாயத்தின் மேற்கொண்டு வளர்ச்சிக்குத் தடையாக அமை கிறது; பிற்போக்குச் சக்தியாக மாறுகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடு கள் வளர்ச்சி அடைந்து ஒரு குறிப்பிட்ட நிலையை அடைந்தவுடன், அச்சமுதாயம் சோசலிச சமுதாயத்தால் அகற்றப்படுகிறது. இவ்வாறு சமுதாய வளர்ச்சியின் ஒரு குறிப் பிட்ட கட்டத்தில் முற்போக்குப் பாத்திரம் வகித்த முதலாளித்துவம், பின்னல் ஒரு குறிப் பிட்ட கட்டத்தில் பிற்போக்காக மாறுகிறது; அதில் முரண்பாடுகளும் நெருக்கடிகளும் தோன்றி கூர்மையடைகின்றன. இறுதியில் அச்சமுதாயம் அகற்றப்படுகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தின் முரண்பாடு களும், நெருக்கடிகளும் எவ்வாறு தோன்றி வளர்கின்றன என்பதை இக்கட்டுரையில் ஆராயலாம்.

## நெருக்கடி (Crisis) என்றால் என்ன?

சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட காலகட் டத்தில் பண்ட மாற்றுமுறை நிலவியதை நாம் அறிவோம். ஒருவர் தான் உற்பத்தி செய்த சரக்கை நேரடியாக மற்றொருவர் உற்பத்தி செய்த சரக்குடன் பரிமாறிக் கொள்வதே அது வாகும். இதை C-C என்ற சூத்திரத்தால் குறிக் கலாம். C என்பது சரக்கைக் (Commodity) குறித்து நிற்கிறது.

சமுதாயம் மேற்கொண்டு வளர்ச்சி யடைந்தபோது, உற்பத்தி பெருகியது; குறிப் பாக சரக்கு உற்பத்தி முறை வளர்ச்சி அடைந் தது. அந்நிலையில் சரக்கு பரிமாற்றம் சிக்க லாகியது. இச்சிக்கலில் உதவுவதற்கு பணம் என்ற சாதனம் உருவாக்கப்பட்டது. பணத் தினால் சரக்கு மாற்றம் எளிமையாகியது. ஒருவர் தனது சரக்கைப் பணத்திற்கு விற்று விட்டு, பின் அப்பணத்தைக் கொண்டு தனக் குத் தேவையான பொருளை வாங்கலாம். இதை C-M-C என்ற சூத்திரத்தால் குறிக்கலாம். முதலில் சரக்கும்; அடுத்து பணம் (Money); மறுபடியும் சரக்கு.

பணம் என்ற இந்த சாதனம் சரக்கின் விற்பனை, வாங்கல் இரண்டையும் இடம் (Space) காலம் (Time) என்ற இரண்டிலும் பிரிக்கிறது. ஒருவர் தனது சரக்கை சென்னை யில் இன்று விற்று பணத்தைப் பெற்றுக்கொள் கிறார் என்று கொள்வோம். அவர் இன்றே அப் பணத்தைக் கொண்டு சென்னையிலேயே வேறு சரக்கை வாங்கவேண்டும் என்ற அவசி யம் இல்லை. இன்னும் சில தினங்கள் கழித்து, சென்னையல்லாமல் பம்பாய் கல்கத்தாபோன்ற வேறு இடங்களில் தனக்குத் தேவையான சரக்குகளை வாங்கலாம்.

மேற்கண்ட அடிப்படையில் அமைந்த பரிமாற்றத்தில் ஒரு சிக்கலைக் காணலாம். A என்பவர் B என்பவரிடம் தனது சரக்கை விற்கிறார்; ஆனால் அவர் B-யிடம் இருக்கிற சரக்கை அப்பணத்தைக்கொண்டு வாங்காமல் இருக்கிறார் என்று கொள்வோம். இதனால் என்ன விளைவு ஏற்படும்; தனது சரக்கைவிற்று பணமாக்க முடியாத B, தனக்கு வேண்டிய

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்னொரு சரக்கை C என்பவரிடம் இருந்து வாங்கமுடியாது அதுபோலவே C-யும் தனது சரக்கு விற்பனையாகாததால், D என்பவரிடம் இருந்து தனக்குத் தேவையான சரக்கை வாங்க முடியாது. இவ்வாறு இப் பிரச்சனை தொடர்ந்து, சமுதாயம் முழுமையையும் இறுதியில் பாதிக்கும். இதனுல் பல சரக்குகள், அவற்றிற்குத் தேவைகள் இருந்தும்கூட, விற்பனையாகாமல் இருக்கும். அதாவது விற்பனையாகாத சரக்குகள் ஒரு புறம்; மறுபுறம் அதற்கானத் தேவைகள். இதனுல் ஒவ்வொருவரும் தன்னுல் விற்கக்கூடிய அளவுக்குக் மேல் சரக்குகளை பெற்றிருப்பார்கள். இதைத்தான் "அபரித உற்பத்தி" (Over production).

இந்த "அபரித உற்பத்தி" எதனுல் ஏற்பட்டது? A என்பவர் விற்பனை, வாங்கலில் ஒரு தடையை ஏற்படுத்தியதே யாகும். தனது சரக்கை மட்டும் விற்றுக்கொண்டு, அதே சமயத்தில் பிறரிடமிருந்து சரக்குகளை அவர் வாங்கவில்லை.

இவ்வாறு "அபரித உற்பத்தி" என்பது பரிமாற்றத்தில் ஏற்படுகின்ற நெருக்கடியின் விளைவே யாகும். ஒருவர் பணத்தின் சுற்றலிலிருந்து (Circulation of money) தனது பணத்தை வெளியே எடுத்துக் கொள்வதால்—அதைச் சரக்கு பரிமாற்றத்தில்பயன்படுத்தாததால்—ஏற்படுகின்ற விளைவாகும்.

## முதலாளித்துவ சமுதாயத்தில் நெருக்கடி

முதலாளித்துவ சமுதாயத்தில் மேற்கண்ட நெருக்கடி ஏற்படுவதற்கு அடிப்படை என்ன?

முதலாளி என்ன செய்கிருன்? முதலில் தனது (M) முதலீடு செய்கிருன். அதாவது அதைக்கொண்டு மூலப்பொருள், கருவி, மனித உழைப்புச்சக்தி மூன்றையும் விலைக்கு வாங்குகிருன். இதை மொத்தத்தில் C என்று (சரக்கு Commodity) குறிப்பிடுவோம். பின் அவற்றை பொருள் உற்பத்தியில் ஈடுபடுத்தி, புதிய சரக்காக மாற்றுகிருன். இறுதியில் அச்சரக்கை விற்று பணமாக (M) மாற்றுகிருன். இதை M - C - M என்ற சூத்திரத்தால் குறிப்பிடுவோம்.

முதலில் அவன் முதலீடு செய்த பணத்தை விட($M^1$)இறுதியில் அவனுக்குக் கிடைக்கின்ற பணம் ($M^2$) அதிகமாக இருக்க வேண்டும். அதைத்தான் லாபம் என்று கூறுகிறோம். அவ்வாறு லாபம் கிடைத்தால்தான், மேற்கொண்டு முதலாளி முதலீட்டில் ஈடுபடுவான்.

லாபம் குறைந்தாலோ அல்லது இல்லாமல் போனுலோ முதலாளி தனது மூலதனத்தை தற்காலிகமாக முடக்கவே விரும்புவான். லாபம் கிடைக்காத நிலையில் எந்த முதலாளியாவது முதலீடு செய்ய விரும்புவானு?

முதலாளித்துவ சமுதாயத்தில் முதலாளி வர்க்கத்திற்கு லாபம் குறைகின்ற அல்லது இல்லாமலே போகிற ஒரு நிலை ஏற்படுமா? அவ்வாறு ஏற்பட்டால், அது எவ்வாறு முதலாளித்துவ சமுதாயத்தைப் பாதிக்கிறது?

முதலாளித்துவ சமுதாயத்தில் இரண்டு வகையில் முதலாளித்துவ வர்க்கத்திற்கு மேற்கண்ட நெருக்கடி தோன்றுகிறது.

ஒன்று தொடர்ந்த உற்பத்தியின் போது, முதலாளித்துவ வர்க்கத்திற்கு லாபம் குறைகிறது.

மற்றொருவகையிலும் முதலாளித்துவ வர்க்கம் பாதிப்பை எதிர் நோக்குகிறது. உற்பத்தியின் இறுதியில் முதலாளி தனது சரக்கை விற்கவேண்டும் அல்லவா? அவ்வாறு விற்கும் போது தானே அவனுக்கு தொழிலாளி அளிக்கின்ற உபரி மதிப்பை-அதாவது முதலாளியின் சுரண்டலை—அடைய முடியும். உற்பத்தியின் போது சரக்கில் தொழிலாளி மதிப்பை உருவாக்குவது வேறு; அம்மதிப்பை முதலாளி நடைமுறையில்விற்றுபெறுவதுவேறு. எனவே முதலாளித்துவ வர்க்கம் ஏதோ சில காரணங்களால், சரக்குகளை விற்கமுடியாமல் போகிறது என்ருல், என்ன நிலை ஏற்படும் மேற்கொண்டு உற்பத்தியில் மூலதனம் முடக்கப்படும். இதனைத் தெளிவாகப் பின்னுல் ஆராயலாம்.

## லாப விகிதம் குறைகின்ற போக்கால் ஏற்படுகிற நெருக்கடி

முதலாளித்துவ சமுதாயத்தில் மூலதனக் குவியல் பெருகப் பெருக, உற்பத்தியும் நவீனமாக்கப்படுகிறது; அதாவது உற்பத்திக் கருவிகள் நவீன மயமாக்கப்படுகின்றன. அதனுல் தொழிலாளியின் உற்பத்தித் திறனும் வளர்ச்சியடைகிறது. அதாவது அவன் முன்னுல் 10 பொருட்களை 1 மணி நேரத்தில் உற்பத்திசெய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தான் என்றும், இப்போது நவீன இயந்திரத்தின் உதவியால் 20 பொருட்களை உற்பத்தி செய்கிறான் என்றுகொள்வோம். இதன்பொருள் என்ன? அவனுடைய உற்பத்தித் திறன் வளர்ச்சி அடைந்துள்ளது. முதலாளியும் தொடர்ந்து உற்பத்திக் கருவிகளில் அதிக மூல தனத்தை செலவழிக்கிறான். அதாவது நிரந்தர மூலதனத்தின் பங்கு அதிகரிக்கிறது. அதன் விளைவு, லாப விகிதம் குறைகிறது. அது எவ்வாறு குறைகிறது என்பதை சென்ற கட்டுரையில் பார்த்தோம். இவ்வாறு லாப விகிதம் குறைவதால், முதலாளித்துவ வர்க்கம் மேலும் முதலீடு செய்வதில் நெருக்கடியைச் சந்திக்கிறது. அதன் விளைவு மொத்த சமுதாயமும் பாதிக்கப்படுகிறது.

மற்றொரு வகையிலும் லாபம் குறைவதை சென்ற கட்டுரையில் பார்த்தோம் மூலதனக் குவியல் பெருகப் பெருக, புதிய புதிய பொருள் உற்பத்தியில் முதலாளித்துவ வர்க்கம் ஈடுபடுகிறது; அல்லது ஏற்கனவே நீடிக்கிற பொருள் உற்பத்தியைப் பெருக்குகிறது. அவ்வாறு பொருள் உற்பத்தி பெருகும்போது, மனித உழைப்புச் சக்திக்கு அதிகத் தேவை ஏற்படுகிறது. அவ்வாறு அதற்குத் தேவை அதிகரிக்கும்போது, அதனுடைய விலையும் ஏறுகிறது. அதாவது தொழிலாளர் கூலியை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. அதனால் முதலாளி வர்க்கத்திற்குக் கிடைக்கிற உபரி மதிப்பின் அளவு குறைகிறது. இவ்வாறு உபரி மதிப்பும், அதன் விளைவாய் லாபமும் குறைகின்ற நிலையில் முதலாளித்துவவர்க்கம் மேலும் தொடர்ந்து மூலதனம் இடுமா! செய்யாது. அதன் விளைவு! மூலதனம் முடக்கப்படுகிறது. உற்பத்தியில் தேக்கம் ஏற்படுகிறது.

உழைப்புச் சக்தியின் விலையை மறுபடியும் பழைய நிலைக்குக் குறைப்பதற்கு, முதலாளித்துவ வர்க்கம் தற்காலிகமாக உற்பத்தியின் வளர்ச்சியை நிறுத்துகிறது. அல்லது ஏற்கனவே உள்ள ஆலைகளை மூடுகிறது. அதன் விளைவு; தொழிலாளர்கள் வேலையிழக்கின்றனர். புதியதாக உழைப்பில் ஈடுபடவருகின்ற வர்களுக்கும் வேலை யில்லை. வேலை யில்லாப் பட்டாளம் பெருகுகிறது. அதன் விளைவாய் மறுபடியும் உழைப்புச் சக்தியின் விலை குறைகிறது. குறைந்த கூலிக்கு உழைக்கும் மக்கள் போட்டி போட்டுக்கொண்டு வருகின்றனர்.

மேற்கண்ட நிலை மறுபடியும் மறுபடியும் தொடர்ந்து வருவது முதலாளித்துவ பொருள் உற்பத்தியின் பண்பாகும்.

இவ்வாறு மேற்கண்ட இரு அடிப்படைகளில் லாபம் குறைவதால், முதலாளித்துவ வர்க்கத்திற்கு நெருக்கடி ஏற்படுகிறது.

(தொடரும்)

# சிறைக் கொடுமைகளுக்கு எதிராக குரல் கொடுப்போம்!

திருச்சி மத்திய சிறையிலுள்ள கைதிகள் நக்சலைட் கைதி ஒருவரின் தலைமையில் வன்முறையில் இறங்கியதாகவும் அதனை அடக்க தடியடியும், கண்ணீர்ப் புகையும், துப்பாக்கிச் சூடும் நடந்ததாகவும் அறிக்கைகள் வந்துள்ளன. உண்மையில் நடந்ததென்ன? கான்விக்ட் வார்டராக இருந்த கருப்பன் என்ற ஆயுட் தண்டனை கைதி ஒரு பெட்ஷீட்டைத் திருடி விட்டதாக 23ந் தேதி வேறு சில கான்விக்ட் வார்டர்களால் தாக்கப்பட்டுள்ளார். அதனை அதிகாரிகள் தட்டிக் கேட்காமல் தாக்கப்பட்ட கருப்பனையே மீண்டும் டவருக்குக் கொண்டு சென்று தாக்கியுள்ளனர். மறுநாள் காலை அவர் பிணமாகத் தொங்கினார். அதிகாரிகளின் நடத்தையை ஆட்சேபித்து சிறைக் கைதிகள் 2000 பேரும் காலையிலிருந்து உணவு உட்கொள்ளவில்லை. மாலை வரை ஜில்ல கலெக்டரோ வேறு மேலதிகாரிகளோ வந்து பார்க்கவில்லை.

கைதிகளின் சாத்வீக போராட்டத்தை பலாத்காரமாக ஒடுக்குவது என்று காலையிலேயே முடிவெடுத்தாயிற்றுபோலும். மாலையில் திடீரென்று 500 போலீசார் உள்ளே வந்து வார்டர்கள் கான்விக்ட் வார்டர்கள் துணையுடன் எவ்வித முன்னறிவிப்பு மின்றி தாக்கத் தொடங்கி யுள்ளனர். கண்ணீர்ப் புகையை வீசி அனைவரையும் மயக்கமடைய செய்து விட்டு லட்டியால் கண்மண் தெரியாமல் அடித்துள்ளனர். கிட்டத்தட்ட 1000 பேருக்கு அடி. அதில் 150 பேர் சிறை மருத்துவ மனையிலும் கடுமையான காயமுற்ற சிலர் வெளிமருத்துவ

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மனையிலும் சேர்க்கப்பட்டுள்ளனர். முக்கியமாக சிலரை பொறுக்கி யெடுத்து இரத்த வெள்ளத்தில் விழும் வரை அடித்துள்ளனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர்கள் லெனின் என்ற ரங்கசாமி, மகாலிங்கம், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த தோழர் நாகப்பன், தி மு க. வைச் சேர்ந்த மதுரைதக்ஷிணாமூர்த்தி, பாண்டிச்சேரி ராமன், மதுரை ராஜு ஆகியோர் அவ்வாறு தாக்கப்பட்டவர்களில் சிலர். தங்களுக்குப் பிடிக்காதவர்களையும் உரிமைக்காக சிறையில் போராடுபவர்களையும் குறிப்பாக தாக்கி விட்டு அவர்களுக்கு நக்சலைட் பட்டம் சூட்ட முயலுகின்றனர். இது அவர்களது வழக்கமான நடைமுறை. அதன்பின்னும் திருச்சிசிறையில் தாக்குதல்கள் நீடித்து வருகின்றன இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நக்சலைட் கட்சியைச் சேர்ந்த தோழர் கலியபெருமாள் 4நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார்.

இந்த மூர்க்கத்தனமான தாக்குதலுக்கு பின்னால் இரண்டு நாட்கள் கழித்து27-8-79 அன்று மாரியப்பர் தேவர் என்ற மற்றுமொரு ஆயுள் தண்டனை கைதி தூக்கு போட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று சிறை அதிகாரிகள் கூறியதாக பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருக்கிறது. ஆனால் உண்மை இப்படி இல்லை; மாறாக நீடித்த தாக்குதலின் விளைவாக அவர் இறந்திருக்கலாம் என்று கருதப்படுகிறது.

இது போன்ற சிறைக் கொடுமைகள் தமிழ் நாட்டில்மட்டுமல்ல இந்தியாபூராவும்உள்ள பல சிறைகளில் நடக்கின்றன. காரணம் இச்சிறைகளும் அவற்றின் நிர்வாக முறைகளும் வெள்ளையர் ஆட்சி தொட்டு நீடித்து வருபவை. இது போன்ற சம்பவங்களை அதிகமாக தட்டிக் கேட்காது இருந்து விட்ட.தன் விளைவுதான் நெருக்கடி நிலைக்காலத்தில் சென்னை மத்திய சிறையில் நடத்தப்பட்ட அட்டூழியங்கள். எனவே நடந்த சம்பவத்தினை கண்டித்து மக்களை திரட்டவும், எதிர் காலத்திலும் இது போன்ற சம்பவங்கள் நடவாது தடுக்கவும் ஜனநாயக, முற்போக்கு சக்திகளும் அமைப்புகளும் ஒன்றுபட்டு இயக்கங்கள் நடத்த முன் வரவேண்டுமென அரசியல் கைதிகள் விடுதலை இயக்கம் அறைகூவி அழைக்கின்றது. ★

## உங்கள் கவனத்திற்கு...

தோழர்களே, வாசகர்களே, விற்பனையாளர்களே !

'சமரன்' மாத இதழின் புதிய தொடர்பு அலுவலகத்தின் முகவரி கீழே தரப்பட்டுள்ளது.

ஒவ்வொரு மாதமும் 20-ந் தேதிக்கு முன்னர் 'சமர'னுக்கு சேர வேண்டிய பணத்தை அனுப்பி வைக்குமாறு விற்பனையாளர்களை கேட்டுக் கொள்ளுகிறோம்.

**சந்தா விவரம் :**

அரை ஆண்டு ரூ. 6/-
முழு ஆண்டு ரூ. 12/-
தனி இதழ் ரூ. 1/-

தொடர்பு கொள்க :
ஆசிரியர்
**'சமரன்'**
51, மேட்டுத் தெரு,
சாத்துமாநகர், சென்னை-600 019.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : வை. சிவசங்கரன், 44, வீராசாமிபிள்ளை தெரு, ஏழு கிணறு, சென்னை-1. அச்சிடுபவர் : எம். கே. சாமி, பிரேம் பிரஸ், 140, எம். கே. அம்மன் கோயில் தெரு, சென்னை-4.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்